உ

குருபாதம்

ஞானசம்பந்தம்

தருமையாதீனத் திங்கள் இதழ்

மலர் 39] ரௌத்திரி ஆண்டு வைகாசித்திங்கள் 10—6—80 [இதழ்

★

ருமையாதீன முதற்குரவர்

குருபூசை விழா.

★

ஸ்ரீ லஸ்ரீ

மகாசந்நிதானம் அவர்கள்

கொலுக்காட்சியில்

திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடம்

ஸ்ரீமத். காசிவாசி

த்துக்குமாரசாமித் தம்பிரான்

சுவாமிகளுக்குப்

பொன்னாடை போர்த்தி

ஆசியருளுதல்.

★

தருமையாதீனக் குருமுதல்வர்

ஸ்ரீலஸ்ரீ குருஞானசம்பந்த சுவாமிகள்

உ

குருபாதம்

ஸ்ரீ குருஞானசம்பந்தர் அருள்வாக்கு

—★—

தன்னந் தனியே
  தமியேன் முறையிட்டால்
இன்னந் திருச்செவியில்
  ஏருதோ — மன்னவனே
தென்மதுரை மேவித்
  திருத்தியசெங் கோல்செலுத்துந்
தன்மதுரை நீயலவோ தான்.

— சொக்கநாத வெண்பா. 65

ஆசிரியர் :-
வித்துவான்
இராமலிங்கத் தம்பிரான் சுவாமிகள்

துணையாசிரியர் :-
மகாவித்துவான்
சி. அருணவடிவேல் முதலியார்.

உ

குருபாதம்

" ஞானசம்பந்தம் "

தருமையாதீனத் திங்கள் இதழ்

மலர் 39 || 10—6—80 || இதழ் 7

உட்பொருள்

எண்		பக்கம்
1	" இணைவோம் - உழைப்போம் - உயர்வோம் " ...	289
௨	தருமை ஸ்ரீலஸ்ரீ குருமகா சந்நிதானம் அவர்கள் வழங்கிய ஆசியுரை	294
3	முனிமொழி ...	299
4	மதிப்புரை ...	303
5	'அந்தரம் சுத்தியில்லை'	304
6	திருத்திலதைப்பதித் தலச் சிறப்பு ...	505
7	அபிராமி அந்தாதி ...	308
8	" ஒருகோட்டன் இருசெவியன்... "	313
9	சங்கநூல்களில் அற்புதங்கள் ...	320
10	அன்னையருள்மாலை ...	324
11	கடிதம் ...	325
12	கடிதப் பாடல்கள் ...	326
13	செய்திகள் ...	328
14	எதிர்காலம் ...	332
15	பார்வையாளர் குறிப்பு	336

ஆண்டுச் சந்தா உள்நாடு ரூ. 9.
ஆண்டுச் சந்தா சிலோன் ரூ. 11.
ஆண்டுச் சந்தா வெளிநாடு ரூ. 17.
ஆயுள் சந்தா உள்நாடு ரூ. 100.
ஆயுள் சந்தா வெளிநாடு ரூ. 125.

உ

குருபாதம்

ஞானசம்பந்தம்

மலர் 39 | ரௌத்திரி - வைகாசி - 10—6—80 | இதழ் 7

திருச்சிற்றம்பலம்

பொன்தயங் கிலங்கொளிந் நலங்குளிர்ந்த புன்சடை
பின்தயங்க ஆடுவாய்! பிஞ்ஞகா! பிறப்பிலீ!
கொன்றையம் முடியினுய்! கூடலால வாயிலாய்!
நின்றயங்கி யாடலே நினைப்பதே நியமமே. — சம்பந்தர்

திருச்சிற்றம்பலம்

"இணைவோம் - உழைப்போம்-உயர்வோம்"

ஒரு இயக்கம் தேவை:

ஒரு கொள்கையை அல்லது ஒரு கருத்தை நாடு முழுவதும் பரவச்செய்யவேண்டுமானுல், அதற்கு வலுவான அடிப்படையோடு கூடிய ஒரு அமைப்பு - இயக்கம் தேவை. அவ்வாருன இயக்கத்திற்கு ஒரு நல்ல தலைமையும் இன்றியமையாதது. தக்க தலைமையின்கீழ் ஓரிடத்தில் மையநிலையம் அமைத்து, மாவட்டம் மற்றும் சிற்றூர்களில் கிளைகள் தோற்றுவித்து, தன்னலநோக்கற்ற, ஆர்வம் மிக்க நல்ல தொண்டர்களையும் உருவாக்கிப் பணிசெய்தால் சிறந்த கொள்கைகளையும் கருத்துக்களையும் நாட்டுமக்கள் உள்ளத்தில் பதிப்பது மிகவும் எளிது. சமயம், மற்றும் சமூக வளர்ச்சி நோக்கில் இவ்வாறு நிறுவப்பெற்ற பல இயக்கங்கள் பல்வேறுகாரணங்களால் நின்று நிலவ

இயலாது மெல்லமெல்லத் தேய்ந்துபோயின, அல்லது ஒரு சில பெயர் சொல்லும் அளவிற்கு இயங்கிக்கொண்டுள்ளன.

இயக்கத்திற்குத் தடை எது ?

தமிழகத்தைப் பொறுத்தவரை, 1300 ஆண்டுகளுக்கு முன்பு, இங்கே வந்து புகுந்து ஆதிக்கம் செலுத்திய சமண - பௌத்த மதங்களுக்கு எதிராகத் திருஞானசம்பந்தரும், திருநாவுக்கரசரும் பக்தி இயக்கங்களைத் தோற்றுவித்து, திருவருள் வலத்தால் வென்றார்கள். முறையான அமைப்புக்கள்மூலமாக இந்த இயக்கத்தைப் பேணிப் பாதுகாக்க நாம் தவறினோம். இன்று, இந்தநாட்டில் நாத்திகவாதமும், கிருத்துவம் மற்றும் இஸ்லாமிய மார்க்கங்களும், தொன்மைமிக்க நமது சமய உணர்வுகளுக்கே சவாலாக வளர்ந்துள்ள நிலை உருவாகியிருக்கிறது. நமக்குள் ஒற்றுமை இன்மையும், மெத்தனப்போக்கும், எந்த ஒரு இயக்கத்தின் வளர்ச்சிக்கும் பெருந்தடைகளாக உள்ளன என்பதை நாம் சிந்திப்பதே இல்லை. நல்ல ஒரு கொள்கைக்காக உருவாக்கப்பட்ட ஒரு இயக்கத்தை, பிற்காலத்தில் வேறு காரியங்களுக்குப் பயன்படுத்தி அதனை மாசுபடுத்திவிடுவதிலும் நம்மவர்களுக்குப் பங்கு உண்டு.

காந்தியடிகளின் அச்சம் :

250 ஆண்டுகளுக்கு முன்பு, இந்தியநாட்டு மன்னர்கள் மத்தியில் ஒற்றுமை இல்லை. வெள்ளையர்வந்து புகுந்து இந்தியநாட்டினைத் தம்வயப்படுத்தினர். அவர்களை வெளியேற்றி, நாட்டுக்குச் சுதந்திரம் பெற்றுத்தர 'இந்திய தேசிய காங்கிரஸ்' என்ற இயக்கம் உருவானது. காந்தியடிகள் தலைமை ஏற்றுப் போராடி அஹிம்சை நெறியில் இந்திய விடுதலையைப் பெற்றுத் தந்தார் "விடுதலைப் போராட்ட நோக்கில் உருவாக்கப்பெற்ற 'இந்திய தேசிய காங்கிரஸ்' இயக்கத்தின் புனிதமான நோக்கம் நிறைவேறிவிட்டது; எனவே, காங்கிரஸைக் கலைத்துவிடுங்கள்" என்றார். மனித இனத்தின் இயல்பு தெரிந்த - குறிப்பாக இந்தியர்களை உணர்ந்த காந்தியடிகள், இயக்கத்தின் புனிதத்தன்மை கெடும் என்று அஞ்சினர். அந்த அச்சம் எவ்வளவு நியாயமானது என்பதை நாட்டுமக்கள் இப்போது உணர்கிறார்கள்.

தொண்டுள்ளம் வேண்டும் :

நடைமுறையில் நமது ஒற்றுமையின்மைக்கு வேறு எடுத்துக்காட்டுக்களும் உண்டு. சில இடங்களில் சங்கம் அல்லது மன்றம் அமைத்துப் பணியாற்றுபவர்களிடம் சென்று 'நான் ஒரு பெருந்

தொகை தருகிறேன்; உங்கள் சங்கத்துக்கு நிலைநிதியாக வைத்துக் கொள்ளுங்கள்' என்று கூறிப்பாருங்கள். 'தேவையான பணத்தை அப்போது வசூலித்து, அப்போதே செலவிட்டுக் கணக்கு முடிக்க வேண்டும். நிலைநிதி, கட்டிடம் சொத்து என்று சேர்ந்தால் வீண் சண்டைவரும்; சங்கமே அழிந்துவிடும்; எனவே, உங்கள் பணம் தேவை இல்லை' என்பார். இந்த அச்சம் நமது ஒற்றுமையில்லாத நிலையின் வெளிப்பாடு. இந்நிலை மாறி - உண்மையோடும், தியாக உணர்வோடும் பணியாற்றும் தொண்டுள்ளம் வளரவேண்டும்.

நல்ல தலைமை வேண்டும்:

எந்த ஒரு இயக்கமாயினும் அது வளமையோடு நின்று நிலவ வேண்டுமாயின் உறுதிமிக்க - தன்னலமற்ற தலைவர்கள் வேண்டும். அதுமட்டுமின்றி அத்தலைமையின்கீழ் வாழும் மக்களும் முரண்பாடின்றித் தலைமையோடு இணைந்து செயலாற்றும் பண்புடையவர்களாக இருத்தல் இன்றியமையாதது. தாயின் பண்பும் தந்தையின் செயல் திறமும் சிறந்திருந்தால்தான். குழந்தை முழுமையாக உருவாகும். இதேபோல நல்ல தலைமையும் - அதனைப்போற்றிக்கொள்ளும் பண்பாடுமிக்க தொண்டர்களும் இருந்தால்தான் கொள்கைகள் உண்மையான வலுவோடு உருப்பெறும். இந்நிலை சமயம், அரசியல், சமூகம் என்ற எல்லா நிலைமைகளுக்கும் பொதுவானதாகும்.

ஒரு நல்ல முயற்சி:

தொன்மையும், பாரம்பரியமும் மிக்க நமது சைவசமயம், பிற மதங்களின் ஆதிக்கத்தாலும், நமது ஒற்றுமை இன்மையினாலும் பண்பாட்டுச் சிதைவுகளாலும் ஒளி குன்றியுள்ளது. இதனை ஒளியூட்டிப் பேணத் தமிழ்நாடெங்கும் பல சமய மன்றங்களும் சபைகளும் தோன்றியுள்ளன. இவை பல ஆண்டுகளாக அவ்வப்பகுதிகளில் இயன்றவாறு சமய வளர்ச்சிப் பணிகளில் ஈடுபட்டுத் தொண்டாற்றி வருகின்றன. இவற்றின் பணிகளை ஒருமுகப்படுத்தி சைவ சமயத்திற்குப் புதிய எழுச்சியினை ஊட்டவேண்டுமென்ற நோக்கில் மாயூரம் தெய்வத்தமிழ் மன்றத்தினரும், ஏனைய சைவப் பேரன்பர்களும், தமிழக சைவ சமயவளர்ச்சி மன்றங்கள் மற்றும் சபைகளை எல்லாம் ஒரேமையத்தின்கீழ் இணைத்து ஒரு பேரியக்கமாக இதனை உருவாக்கிட முனைந்தனர். 450 ஆண்டுகளாக சைவத் தமிழ் வளர்ச்சிக்கே தன்னை அர்ப்பணித்து வளர்ந்துவரும் ஞானப் பண்ணையாகிய தருமையாதீனத்தில் ஆதிபரமாசாரியராகிய ஸ்ரீ குரு ஞானசம்பந்தர் குருபூஜை விழாவை ஒட்டித் தெய்வத்தமிழ் மன்றத்தார் மூன்றுநாள் கருத்தரங்கிற்கு ஏற்பாடு செய்திருந்தனர்.

விருப்பமும் வேண்டுகோளும் :

முதன்முயற்சியாக 40 மன்றங்கள் இவ்வாலோசனைக் கூட்டத்தில் பங்கேற்றன. இவற்றின் சார்பாளர்களாக ஐம்பது பெருமக்கள் கலந்து கொண்ட இம்மூன்றுநாள் ஆலோசனைக் கூட்டத்தில், தருமையாதீனத்தை மையமாகக்கொண்டு இப்போதுள்ள சமய வளர்ச்சி மன்றங்களை ஒருங்கிணைத்து மாவட்டங்கள்தோறும் நூற்றுக்கணக்கான புதியகிளைகளை உருவாக்கிடத் தீர்மானிக்கப்பெற்றது. தருமையாதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள், இயல்பாகவே சைவ சமய வளர்ச்சிக்குப் பேரியக்கங்காணவேண்டுமென்ற திருவுள்ளம் கொண்டவர்கள். அன்பர்கள் தருமையாதீனம்போன்ற வலிவும், பொலிவும்மிக்க ஒரு தலைமையின் கீழ் ஒருங்கிணைந்து பணியாற்ற விரும்பினர். விருப்பத்தை விண்ணப்பித்துக் கொண்டனர். இவ்வியக்கத்திற்குத்தக்க ஓர் பெயர் சூட்ட வேண்டிக்கொண்டனர்.

ஆவணிமூலத்தில் அறிவிப்பு :

தருமையாதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் இவ்வாறுன இயக்கங்கள் மாவட்டத்தலைநகரங்களில்மட்டும் கிளைகளைத் தோற்றுவித்தல் போதாது ; எல்லாச் சிற்றூர்களிலும் கிளைகள் அமைத்தல்வேண்டும்; முன்னரே தமிழகத்தில் சமயவளர்ச்சிநோக்கில் தமிழ்நாடு தெய்விகப் பேரவை, விசுவ ஹிந்து பரிஷத், இந்து சமய மன்றம், அருள் நெறித் திருக்கூட்டம் போன்ற அமைப்புக்கள் உள்ளன. இவற்றோடே இம்மன்றங்களையும் சபைகளையும் இணைத்துச் செயல்படுவதா? அல்லது தனியே ஒரு இயக்கத்தை உருவாக்கி அதன் கிளைகளாக இவற்றைக்கொள்வதா ? என்பதை அன்பர்கள் பலரது கருத்தினையும் பல வகையிலும் அறிந்து ஆராய்ந்து ஆவணிமூலத் திருநாளில் ஒருமுடிவுக்குவரலாம் எனத் திருவாய்மலர்ந்தருளினர்கள்.

தமிழகத்தின் பல பகுதிகளிலும் சமய வளர்ச்சிப்பணியில் ஈடுபாடு கொண்டு பணியாற்றிவரும் அன்பர்களும், சமயச் சார்பு மன்றத்தினரும் இது பற்றிய தங்கள் கருத்துக்களைத் தருமையாதீனத்திற்குத் தெரிவிக்கலாம். இவற்றை எல்லாம் நன்கு பரிசீலித்து ஒரு முடிவுக்குவரவே இடையில் இரண்டுமாத அவகாசம் தேவையாக உள்ளது. ஆதீனக் குருமுதல்வரின் திருநாளில் உருவான எண்ணம், ஆதீன பூஜாமூர்த்தியாகிய ஸ்ரீ சொக்கநாதப்பெருமானுக்கு உகந்த ஆவணிமூலத் திருநாளில் முழுவடிவம் பெறுவது பொருத்தமானதேயாகும். (சமயமன்றங்களின் இணைப்புப்பற்றிய மூன்று நாள் ஆலோசனைக் கூட்டத்தைத் தொடங்கிவைத்து ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்தில் வழங்கியருளிய ஆசியுரை இதே இதழில் தனியே வெளிவந்துள்ளது)

அன்பர்களுக்கு அழைப்பு :

இவ்வியக்கம் புதிய எழுச்சியோடு செயற்பட நல்ல தொண்டர்கள் தேவை. ஓரளவுக்கு நிதி நிலைமைகளும் இன்றியமையாதது. ஆங்கிலமோகம் குறையாததுபோலவே அன்னியமோகமும் குறையாத செல்வர்கள் பலர் அரிமா சங்கம், சுழற்சங்கம், செஞ்சிலுவைச்சங்கம் போன்றவற்றில் இணைந்தால்தான் பெருமை அடையலாம் என்ற நோக்கில் பெரும் பொருளை வழங்குகின்றனர். சமயம் மற்றும் கலாசார பண்பாட்டு வளர்ச்சி நோக்கில் அமையும் நமது தாய்நாட்டு, தாய்ச் சமய அமைப்புக்களில் இவர்கள் அங்கம்வகித்து நிதி வழங்கி இவற்றின் வளர்ச்சியில் பங்கேற்கவேண்டும். எங்கோ இருக்கும் போப்பாண்டவர் இடும் கட்டளைகளை உலகக்கிருத்துவர்கள் ஏற்றுச்செயல்படுவதுபோல. நமது சமயத் தலைவர்களின் கட்டளைகளை ஏற்றுச் செயற்படும் கட்டுக்கோப்பும் பண்பும் நம்மவர்களிடையே வளரவேண்டும். வருவாயில் ஒரு சிறுபகுதியையாவது சமயவளர்ச்சிக்கென ஒதுக்கும் மனோபாவம் மக்கள் மத்தியில் வளரவேண்டும். ஏழ்மை காரணமாக வேறு சமயத்திற்குச்செல்ல விரும்புவோர்க்கு ஆதரவு நல்கி அவர்களைத் தாய்ச் சமயத்தில் ஊன்றிநின்று வாழப் பழக்குதல் வேண்டும். ஆண் பெண் பாகுபாடின்றி அனைவரையும் சமயத்துறையில் ஈர்த்து இயன்றவாறு பணியாற்றும் மனநிலையை அவர்களுக்கு உருவாக்கவேண்டும். இயக்கத்தில் பணியாற்றும் அன்பர்கள் தியாக உணர்வும் தூயதொண்டு நோக்கும் உடையவர்களாகத் தம்மை உருவாக்கிக்கொள்ளவேண்டும். இவ்வாறான நல்ல பண்பாடுமிக்க சமூகத்தை உருவாக்க - பக்திநெறி ஊட்ட, தமிழக மக்கள் தங்களை விருப்பத்தோடு இந்த இயக்கத்தில் இணைத்துக் கொண்டு இனிதேசெயல்பட்டு வாழ் பாங்குவாழ உறுதிபூண அழைக்கின்றோம். தமிழ்மக்கள், சைவமக்கள், சமயநெறிநிற்கும் சான்றாண்மைமிக்க மக்கள் தத்தமது கடமையாற்றிச் சிறப்பிப்பார்களாக.

மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்.

உ

குருபாதம்

திருக்கயிலாய பரம்பரைத் தருமை ஆதீனம்

26 ஆவது குருமகாசந்நிதானம்

ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த

பரமாசாரிய சுவாமிகள்

தருமையாதீனத் திருமடத்தில்

குருபூஜைப் பெருவிழாவையொட்டி நடைபெற்ற

சமய மன்றங்கள் ஒருங்கிணைப்பு

ஆலோசனைக் கூட்டத்தைத் தொடங்கிவைத்து

வழங்கியருளிய

ஆசியுரை

3—6—1980

" சீரணியும் நுதலின்விழி மழுமான் நாகம்
திருந்தும்ஏரி பொருந்துவிடம் தெரிந்திடாமல்
தாரணி அன்பரை ஆள அவர்போல் வந்த
சைவசிகாமணி எவர்க்கும் தலைவன் எங்கோன்
காரணியும் நெடிய பொழிற் கமலைவேந்தன்
கருணைமழை பொழியும் இரு கடைக்கணுளன்
பாரணியும் ஞானசம் பந்தன் எந்தை
பரமன் இரு சரணமலர் பரவி வாழ்வாம். "

— சம்பந்தசரணாலயர்.

" வம்மின் அடியீர் நாண்மலரிட்டுத் தொழுதுய்ய
உம்மன் பினொடெம்மன் புசெய் தீசன் உறை கோயில்
மும்மென் றிசை முரல்வண்டுகள் கெண்டித் திசையெங்கும்
விம்மும்பொழில் சூழ்தண்வயல் வீழிம்மிழலையே "

— சம்பந்தர்.

அமைதியற்ற வாழ்வு ஏன் ?

மக்கள் வாழ்க்கையில் சமய உண்மைகள், தத்துவங்கள்பற்றிய ஆழ்ந்த அறிவும் நம்பிக்கையும் இருந்தால் வாழ்க்கை அமைதியாக இருக்கும். இதனை உணர்ந்த நமது முன்னோர்கள் பல்லாயிரம்

ஆண்டுகட்குமுன்னரே இவ்வுண்மைகளைக்கண்டும் கடைப்பிடித்தும் வந்தனர். சமயத்தில் நம்பிக்கையில்லாது, கடவுள் உண்டா? இல்லையா? என்ற ஆய்வில் இறங்கி, இன்று பலர் நிம்மதியில்லாமல் உழல்கின்றனர்.

நம்முடைய சைவ சமயம் கி. மு. என்றோ, கி. பி. என்றோ குறிப்பிட்டுச் சொல்ல இயலாத பழமையுடையது. சமய வாழ்வு என்பது இன்று பலராலும் போலியாக மேற்கொள்ளப்பட்டுவருகிறது. வெளிப் பார்வைக்காகச் சிவசின்னங்களை அணிந்தும், திருக்கோயில்களுக்குச் சென்றும் பகட்டு வழிபாடு செய்வோரும் அமைதியின்றி அலைகின்றனர். சமயத்தில் ஆழமாகவும் அழுத்தமாகவும் நம்பிக்கைகொள்வதையும், அருளாளர்களின் வாழ்க்கை நெறியினைக் கடைப்பிடித்து வாழ்வதையும் நியமமாகக் கொண்டவரே உண்மையான சமயநெறியினராவார். இத்தகையர் எளியராயினும், வலியராயினும் அமைதியுடன் இனிது வாழ்கின்றனர். அங்ஙனம் உறைப்பான பக்தி வாழ்க்கையில் - தத்துவவாழ்க்கையில் வாழ்ந்தும் வாழ வழிகாட்டியும் வந்தவர்கள் அருளாளர்கள். நம்மை நெறிப்படுத்த ஆண்டவனாலும், அருளாளர்களாலும் அருளிச்செய்யப்பட்டனவே வேதம், ஆகமம், புராணம், இதிகாசம், தோத்திரசாத்திரங்கள். ஞானசம்பந்தர்முதலான சமய குரவர்களும் மெய்கண்டார் முதலிய சந்தானகுரவர்களும் நம் நாட்டில் சமய தத்துவ நெறியில் வாழ்ந்தும் வாழவேண்டியவர்களுக்கு வழிகாட்டியும் வந்தவர்கள்.

அருளாளர்கள் காட்டிய இருவழி

சமய உண்மைகளையும் தத்துவங்களையும் பரவச்செய்ய இரண்டு வழிமுறைகள் உண்டு. ஒன்று, இருந்த இடத்திலிருந்தே நாடிவந்தோர்க்கு உபதேசம் செய்வது. பிறிதொன்று, மக்களை நாடிச்சென்று உபதேசம் செய்வது. இந்நிலை மொழியியலிலும் உண்டு இலக்கண நூல்களில் சொற்கள் சூத்திரங்களில் பயன்படுமாற்றை விளக்கும் பொழுது, ஓர் அரசனின் ஆணைவழிச் செயல்படும் அதிகாரிகள் ஆங்காங்கே சென்றுசென்று வரிவசூலிப்பது போல் சொற்கள் சூத்திரங்கள் தோறும் சென்று சென்று பொருள் பயப்பன ஒருமுறை. அரசன் தான் இருந்த இடத்திலிருந்தே தன் நிலம் முழுவதும் தன் ஆணையின் நடக்கச்செய்வது போல் ஒருசொல் தான் இருக்கும் இடத்திலிருந்தே அதிகாரம் முழுவதும் தம் பொருள் பயக்குமாறு செய்வது ஒருமுறை. அங்ஙனமே சமய உலகில் சமயாசாரியர்கள் மக்கள் இருக்கும் பல்வேறு இடங்களை நாடிச்சென்று அருளுபதேசம் செய்தருளினர்கள். இது பூனை, தன் குட்டியினை வாயில் பற்றி இடரிலிருந்து காப்பாற்றி அதனை வாழவைப்பதுபோல விளங்குவது. இதனை மார்ஜாரநியாயம் என்பர். மார்ஜாரம் - பூனை.

சந்தானுசாரியர்கள் அங்ஙனமின்றித் தாங்கள் இருந்த இடத்திலிருந்து தங்களை நாடிவருவோருக்கு உபதேசித்தருளினர்கள். அன்பு மிக உண்டாய், அதிலே விவேகம் உண்டாய், துன்பவினையைத் துடைப்பதுண்டாய், இன்பம் தரும் பூரணத்திற்கே தாகமுண்டாய், ஓடிவரும் காரணர்க்கு உண்மையை உபதேசித்தருளியவர்கள். குரங்குக்குட்டி தானே தன்தாயை இறுகப்பற்றிக்கொள்வதுபோல் பக்தன் பக்குவமுதிர்ச்சியால் தானே இறைவன் இருக்கும் இடம் தேடிச்சென்று பற்றிக்கொண்டு பயன்பெறுவது. இதனை மற்கட நியாயம் என்பர். மற்கடம் - குரங்கு.

இக்காலச் சூழலில் இனிச் செய்வது எது ?

தண்டத்தலைவர்கள் போலவும் மாற்சாரநியாயப்படியும் சென்று பணிசெய்தவர்கள் சமயாசாரியர்கள். அரசனைப் போலவும் மற்கட நியாயப்படியும் இருந்த இடத்தில் இருந்தே பணியாற்றியவர்கள் சந்தானுசாரியர்கள். இச்சந்தானுசாரியர்கள் பரம்பரையில்வந்த திருமடங்கள்தாம் தருமை, துறைசை ஆதீனங்கள் போன்றவை. அந்தந்தக் காலநிலைக்கேற்பத் திருமடங்கள் சமய வளர்ச்சிக்கும் சமுதாய வளர்ச்சிக்கும் பல்வேறு நிலையில் துணைபுரிந்துவருகின்றன.

இப்பொழுது இருக்கும் காலநிலையில் சமயாசாரியர்களின் வழியில் திருமடங்களும், அறநிலையங்களும், சமயமன்றங்களும் தண்டத்தலைவர்கள்போல் பூனைக்குட்டி நியாயப்படி மக்களிருக்கும் இடங்களை நாடிச்சென்று சமய உண்மைகளையும் தத்துவங்களையும் உபதேசித்தும், சிவசின்னங்களை அணியச்செய்தும், அதில் அழுத்தமான பக்தியுடையவர்களாகச்செய்தும், மக்களை நெறிப்படுத்த வேண்டுவது இன்றியமையாததாகும். இந்த அடிப்படையில்தான் இங்கு மன்றங்கள் ஆலோசனைக்குக் கூடியுள்ளன.

மக்களிடையே சமய நம்பிக்கையும், அழுத்தமான பக்தியும் இருந்தால் திருக்கோயில், திருமடங்களில் நிலச்சீர் திருத்தம் போன்ற சட்டங்கள் புகுந்து விளையாடியிருக்காது. இதனை இன்றிருக்கும் பக்தர்களும் மக்களும் சிந்திக்கவேண்டும். ஆட்சியாளர்கள், நம் நாட்டில் சுதந்திரம் எங்ஙனம் சாத்விகமாகவந்தது என்பதையும், அதற்குள்ள அடிபடைக்காரணம் சமய உணர்வுதான் என்பதையும் மறந்துவிட்டார்கள் என்றே தோன்றுகிறது. அதுபோலவே பொதுமக்களும் சமய உணர்வின் அடிப்படையை மறந்துபோனதன் விளைவே இன்று பல்வேறு திருக்கோயில்களும் அறநிலையங்களும் அரசாங்கச் சட்டத்திற்கு உள்ளாகி இன்றுள்ள கட்டத்திற்கு ஆளாகி நலிந்த நிலையில் காட்சிதருகின்றன.

சமய மன்றங்களின் சத்தான பணிகள் :

இனியாகிலும் ஆங்காங்குள்ள சமயமன்றங்களும் மன்றங்களைச் சார்ந்தோரும் பிறரும் இதனைச் சிந்தித்து ஆக்கபூர்வமான பணிகளைச் செய்ய ஒருங்கிணைந்த ஓர் அமைப்பை உருவாக்கவேண்டும். எந்தவித மாற்றங்களையும் இனி ஒரு தனி மனிதனோ ஓர் அறநிலையமோ செய்துவிட முடியாது. எனவே மக்கள் இதனை நன்கு சிந்தித்து மன்றங்கள், சங்கங்கள், கழகங்கள் என்ற பல்வேறுபெயரில் தமக்குள் ஒரு அமைப்பினை ஏற்படுத்திக்கொண்டு தக்கசமய சமூகப்பணிகளைச் செய்வதே இப்பொழுது உடன் செய்யத்தக்கதாகும்.

சமய மன்றங்கள் பொதுமக்களுக்குச் சமய உண்மைகளையும் தத்துவங்களையும் போதிக்கவேண்டும். செல்வந்தர்களும் பிறரும் தங்கள் பிள்ளைகளுக்குப் பொன்னையும் பொருளையும் பகட்டான மாளிகையையும், நிலத்தையும் சொத்துக்களாகச் சேர்த்துவைப்பதை விட்டுவிட்டு அவர்களின் உள்ளத்தில் பக்தியையும் பண்பாட்டையும், நீதியையும், நேர்மையையும், உண்மையையும், ஒழுக்கத்தையும், உழைப்பையும், அன்பையும், அறிவையும், தியாகத்தையும் பதியவைப்பதே செய்யத்தக்கதாகும். இங்ஙனமே ஆசிரியர்களும் நடப்பதுடன் தங்களிடம் படிக்கும் மாணவர்களுக்குப் போதிக்கவும் வேண்டும்.

அரசாங்கம் பொதுமக்களுக்கு அச்சத்தின்வழியும் ஆணையின் வழியும் வரிவசூலித்து நன்மைகள் செய்வதுபோல, அறநிலையங்களும் மன்றங்களும் அன்பின்வழியும் அற உபதேசங்களின்வழியும் பொது மக்களை நல்வழிப்படுத்தவேண்டும்.

பொருளை ஈட்டுதற்குப் புதிய வழிமுறைகள் :

இங்ஙனமுள்ள பணிகள் பலவற்றையும் செய்வதற்குப் பொருள் தேவை. அப்பொருளையும் மக்களிடையே சந்தாமுறையிலும் கட்டணமுறையிலும் அன்புக்காணிக்கை முறையிலும் வசூலிக்கலாம். 'நாடார் மகிமை' போலச் 'சிவமகிமை' என்ற பெயரில் ஒவ்வொரு கடையிலும் விற்பனைப் பட்டியல் ஒன்றுக்குப் பத்துபைசா அல்லது பதினைந்துபைசாவீதம் வாங்குவோரிடம் வசூலிக்கச் செய்து பொருள் ஈட்டலாம். மேலும் ஒவ்வொரு கடையிலும், வீட்டிலும் ஓர் உண்டியலைவைத்துத் தினந்தோறும் கடையைத் திறந்தவுடன் கடையின் உரிமையாளர், சமயம்வளரத் தன் சமுதாயம்வளரப் பிரார்த்தனைசெய்து அவரால் இயன்றது பத்துபைசாவோ இருபத்தைந்து பைசாவோ அதில் போடச்செய்யலாம். மாதம் ஒருமுறையோ அல்லது மூன்று மாதத்திற்கு ஒருமுறையோ மன்றப்பொறுப்பாளர் அத்தொகையை

வசூலித்து நிதிவளம்பெருக்கலாம். இங்ஙனம் ஒவ்வொரு ஊரிலுமுள்ள கடைகள்மூலமும் செல்வந்தர்கள், பொதுமக்களிடமிருந்தும் பணத்தை ஈட்டலாம். தொகைகள் சேரச்சேரக் கட்டுப்பாட்டுடனும் நேர்மையுடனும் செயல்படுவது மிகவும் அவசியமானது. மக்கள் பணத்தைக் கொண்டு மக்களுக்கே பணிசெய்யலாம். காலை மாலை வகுப்புக்கள், கோடைக்கால வகுப்புக்கள், முதியோர் வகுப்பு, அன்பில்லம், குழந்தைகள் காப்பகம், குழந்தைக் கல்வியகம் இப்படிப் பலவகையிலும் பணிபுரிந்து சமயத்தையும் சமுதாயத்தையும் வளர்க்கலாம்.

இந்த மன்றங்கள் தனித்தனியே இயங்குவதுமட்டுமன்றித் தமக்குள் ஒருதலைமை மன்றத்தினையும் ஏற்படுத்திக்கொண்டு அதற்குக் கட்டுப்பட்டு இயங்கவும்வேண்டும். மன்றங்களிடையே எந்தவித பூசலும் இடம்பெறுவகையில் பார்த்துக்கொள்ளவேண்டும். பணம் இல்லையே என்ற கவலையை விட்டுவிட்டுப் பணிசெய்ய முன் வருதல்வேண்டும்.

பணியை நாம் நாடினல் பணம் நம்மை நாடிவரும்:

எந்தமனிதனும் தனக்குப் பணமில்லையே என்று கவலையுறுதல் தேவையில்லை. பணம் நம்மைநாடிவரும். பணியினை நாம்நாடிச்செல்ல வேண்டும். வாழ்க்கை வசதிகளுக்காகவே உழைப்பது என்றில்லாமல் நாயன்மார்களைப் போல் சமயத்திற்காகவும் சமுதாயத்திற்காகவும் உழைக்கத் தயாராகவேண்டும். விவேகானந்தர் கூறியதுபோலத் தியாக உணர்வும் செயல் திறமும் மிக்க தொண்டர்கள்பலர் இப்பொழுது தேவைப்படுகின்றனர்

சமய உணர்வும் சமுதாய எழுச்சியும்:

இந்தக் குருபூஜைத் திருநாளில் மக்களிடையே சமயத்தைப் பரப்பும் ஒரே நோக்கில் பல மன்றத்தினரும் ஆய்ந்து ஒரு நல்ல முடிவுக்குவர இங்குக் கூடியிருக்கின்றீர்கள். திருக்கோயில்களிலும் அறநிலையங்களிலும் நடைபெறும் பூஜைகள் திருவிழாக்கள் போன்றவை நல்லநிலையில் குறைவின்றி நடைபெற வருவாய் பெருகவேண்டும். அதற்கு மக்களிடையே சமய உணர்வில் எழுச்சியும் ஒருமித்த மனநிலையும் தேவை. சமய மன்றங்கள் அப்பணியினை ஆங்காங்கே செய்தல்வேண்டும்.

நல்லுணர்வுடன் கூடியுள்ள இக்கூட்டத்தினரின் எண்ணங்கள் செயல் வடிவம் பெற்று வெற்றி பெறவும், பணிபுரியும் பக்தர்கள் நலம் பல பெற்று நீடுவாழவும் செந்தமிழ்ச்சொக்கன் திருவருளைச் சிந்திக்கின்றோம்.

வாழ்க சமயப்பணி! வளர்க சமயத் தொண்டர்கள்!!

முனிமொழி

நக்கீரன் வழியடிமை,

புலவர். திரு. பி. மா. சோமசுந்தரனார்

1. முன்னுரை

"தேவர் குறளுந் திருநான் மறைமுடிவும்
மூவர் தமிழும் முனிமொழியும் — கோவை
திருவா சகமும் திருமூலர் சொல்லும்
ஒருவா சகமென் றுணர்"

என்பது ஔவைப்பிராட்டியார் அருளிச்செய்த நல்வழி என்னும் நூலின் ஈற்றுச்செய்யுள் ஆகும். இதன்பொருள் :-

திருவள்ளுவ நாயனார் அருளிச்செய்த திருக்குறளும், மேம்பாடுடைய நான்கு மறைகளின் முடிவும், அப்பர், சம்பந்தர், சுந்தரர் ஆகிய மூவரும் அருளிச்செய்த தமிழ் மறையாகிய தேவாரமும், வியாசமுனிவர் அருளிச் செய்த பிரமசூத்திரமும், திருக்கோவையாரும், திருவாசகமும், திருமூலர் அருளிச்செய்த திருமந்திரமும் ஒருபொருளையே உணர்த்தும் மொழிகள் என்று உணர்வாயாக என்பது.

ஒருசாரார் முனிமொழியும் என்பதன்கண் உள்ள உம்மையை எண்ணும்மையாகக் கொள்ளார். இவர் முனி என்பது மணிமொழிப் பெருமானைச் சுட்டுவதாகக்கொண்டு மொழியும் என்பதனை வினையாக்கிக் கோவை திருவாசகம் என்ற தொடரோடு கூட்டிப் பொருள் உரைப்பர் திருநான்மறை முடிவு எனவே வியாசர்நூல் போந்தது என்பாரும் உளர். இன்னோர் நான்மறையின் முடிவு எனப்படும் உபநிடதங்கள்வேறு; அவற்றைப் பற்றுக்கோடாகக்கொண்டு செய்யப் பட்ட பிரமசூத்திரம் வேறு என்பது உணராராயினர்.

முனிமொழி என்றே ஒருநூல் உளது என்பாரும் உளர். இம் முனிமொழி மேற்செய்யுளிற் போந்த ஏனைய நூல்களைப் போன்று பயிற்சியின்கண் இல்லாமையாலும், அது சிவநெறிநூல் என்பதற்கு ஒரு சான்றும் இல்லாமையாலும், அது ஔவைப்பெருமாட்டிக்கு முற்பட்டது எனற்குச் சான்று இல்லாமையாலும், அவ்வுரை ஏற்றுக் கோடற்பாற்றன்று என்க.

இனி, மேற்செய்யுட்கண் ஓதப்பட்டன சிவநெறி நூல்களாதலின் அவற்றோடு ஒப்பவைத்து உரைக்கப்பட்ட முனிமொழியும் சிவநெறி (சுத்தாத்துவிதம்) உணர்த்துவதாகல் வேண்டும். எனினும் ஒரு சாரார் அதனை மாயாவாத (ஏகான்மவாத) நூலாகக்கொண்டு மயங்குவர். இம்மயக்கத்தால் முனிமொழியும் என்றதொடரைக் கோவை திருவாசகம் என்பவற்றோடு இணைத்துப் பொருள் உரைப்பர்.

ஆதலால் முனிமொழியாகிய வேதாந்த சூத்திரம் சிவநெறி நூலா அல்லது ஏகான்மவாத நூலா என்று காண்போமாக.

2. பிரமசூத்திரம் — பெயர்க்காரணம்

சிவபிரானைப் பிரமம் எனவும், அவன் அருளும் வீடுபேற்றைப் பிரமலோகம் எனவும் உபநிடதங்கள் வழங்கும். அதனை,

> " உருத்திர வழிபாட்டில் பேரன் புடையோன் ஓங்காரத் தேரில் ஏறித் திருமாலை வலவனாகக்கொண்டு பிரமலோகத்தைத் தேடிச்செல்வான் "

என்று அமிருதநாத உபநிடதம் கூறலான் அறிக. இப்பிரமலோகம் நான்முகன் இருக்கையன்று என்னை? தேர்கடாவுவான் அவனினும் மேம்பட்ட திருமாலும், செல்வோன் சிவவழிபாட்டினனும் ஆகலான் என்க. அன்றியும்,

> " நீரின்பற்றுக்கோடு காற்று. இதன்பற்றுக்கோடு விண் இதன் பற்றுக்கோடு யாழோர் உலகு. இதன் பற்றுக்கோடு கதிரவன் உலகு. இதன் பற்றுக்கோடு திங்கள் உலகு. இதன் பற்றுக்கோடு விண்மீன் உலகு. இதன் பற்றுக்கோடு தேவர் உலகு. இதன் பற்றுக்கோடு இந்திரன் உலகு. இதன் பற்றுக்கோடு நான்முகன் உலகு. இதன் பற்றுக்கோடு பிரமலோகம். இதன் பற்றுக்கோடு இவண் சொல்லத்தகாதது "

என்று பிருகதாரணியக உபநிடதங்கூறலாலும் பிரமலோகம் என்பது சிவனார் உலகே என்பது தெளியப்படும். இவ்வண்ணமே,

> " அவன் இவ்விதமாக வாழ்நாள்காறும் இருந்து பிரமலோகத்தை அடைகின்றனன். மீளத் திரும்புவானல்லன். மீளத் திரும்புவானல்லன் "

என்று சாந்தோக்கியம் முதலிய உபநிடதங்கள் முழங்குகின்றன. இவ்வாறே ஞானமே வடிவமாகவுள்ள பிரமம் எனும் பொருளைத்தரும் " ப்ரஜ்ஞாநம் ப்ரஹ்ம " என்பது இருக்குவேதமும், இந்த ஆன்மா பெரியது எனும் பொருளைக்கொண்ட 'அயமாத்மாப்ரஹ்ம' என்பது அதர்வவேதமும், நான் அந்தப் பிரமமாய் இருக்கிறேன் எனும் பொருளைப்பயக்கும் 'அஹம் பிரஹ்மாஸ்மி' என்பது யசுர்வேதமும்

கூறும் பெருமொழிக (மகாவாக்கியங்க) ளில் பரமசிவத்தைப் பிரமம் எனக் கூறிக்கொண்டமை ஓர்க.

ஆனல் பிரமம் என்ற சொல் திருமாலைச் சுட்டாதோ எனில் சுட்டாது. பிரமம் எனில் பெரியது என்று பொருள். பஸ்மசாபால உபநிடதம்,

"அத்வைதம் சதுர்த்தம் ப்ரஹ்ம விஷ்ணுருத்ராதீத
மேகமாசாஸ்யம் பகவந்தக் சிவம்"

என்று நான்முகன், திருமால், உருத்திரன் என்போரைத் தாழ்நிலைப் படுத்து நான்காவது தெய்வமாகச் சிவபிரானைக் கூறுதல் காண்க. எனவே பிரமம் என்ற சொல் திருமாலைக் குறிக்கவேண்டுமேல் அவர் நான்காவது தெய்வமாகக் கூறப்படல்வேண்டும். எந்த மறையும் அப்படிக் கூறினதின்று. நான்முகனை நோக்கத் திருமால் பிரமம் ஆயினும் உருத்திரனை நோக்கத் தாழ்பொருளே ஆவர். சிவனுரை நோக்க இம்மூவரும் தாழ்நிலையரே என்க. எனவே திருமாலைப் பிரமம் எனல் ஏற்புடைத்தாகாது.

ஆயின், ஏகான்மவாதிகள் பிரமம் வேறு, உருத்திரன் வேறு. முன்னையது குணங்கடந்து யாண்டும் நீக்கமற நிறைந்துநிற்பது. பின்னையது எண்குணம் இயைந்து உருவம் உடையது. எனவே யாம் கொண்ட பிரமமே பெரியது என்பரேல், சிவனுரை நான்காவது தெய்வமாகக்கூறும் மறைகள் இன்னோர்கூறும் பிரமத்தை ஐந்தாவது தெய்வமாக வழுத்தியிருத்தல்வேண்டும். அவ்வாறு எம்மறையும் வழுத்தக்காணுமையானும் குணம் அற்ற பொருளின் இருக்கை பிரம லோகம் என்பதும் நகைப்பை விளைக்கும் ஆதலானும் இவர் கூற்று பொருந்தாது என்க.

இவற்றை எல்லாம் நன்கு தேர்ந்தே வியாச முனிவர் "பின்பு, ஆகலிற் பிரமத்தை அறிய ஆசை" (அதாதோப்ரஹ்மஜிஜ்ஞாஸா) என்று முதற் சூத்திரத்தின்கண்ணேயே பிரமம் என்ற சொல்லை வருவித்துக்கொண்டு "திரும்பிவருதலில்லை என வேதங்கூறலின், திரும்பிவருதலில்லை என வேதங்கூறலின்" (அநாவ்ருத்திச் சப்தா தநாவ்ருத்திச் சப்தாத்) என்று இறுதிச் சூத்திரத்தைக்கூறி முடிப்பா ராயினர். இதுநோக்கியே அவர் நூலும் பிரமசூத்திரம் எனப் பெயர் பெற்றதென்று உணர்க.

3. நூல் நுதலியபொருள்

"உத்பத்த்யஸம்பவாத்" என்ற சூத்திரத்தால் வியாசர் பாஞ்ச ராத்திர நெறியை மறுப்பாராயினர். இந்நூலுக்குப் பேருரைகண்ட இராமானுசரும், இச்சூத்திரத்துக்கு உரைவகுக்குங்கால்,

"(ஜீவனுக்கு) உத்பத்தி ஸம்பவியாமையாலே (ஜீவோத்பத்திசொல்கிற பாஞ்சராத்திரம் பிரமாணமாகமாட்டாது) என்று உரையும், "பாஞ்சராத்திரத்திலும் சில வேத விருத்தார்த்தங்கள் பிரதிபாதிக்கப்படுகின்றன. அவையாவன :- (வாஸுதேவாத் ஸங்கர்ஷணோநாம ஜீவோ ஜாயத) என்று ஸங்கர்ஷணன் என்கிற ஜீவன் உண்டாகிறானென்று சொல்லிற்று. இது (நஜாயதேம்ரியதே) என்று ஜீவனுக்கு உத்பத்தி விநாசங்கள் இல்லை எனும் வேதத்தோடு விரோதிக்கின்றது. மேலும் நாலு வேதங்களிலும் பரம புருஷார்த்தம் இன்னதென்று அகப்படாமல் பின்பு இப்பாஞ்சராத்ரத்தைக் கற்றான் என்று வேதத்தை அநாதரித்துச்சொல்லிற்று. ஆகையால் இவ்வாகமமும் அப்ரமாணம் என்று பூர்வ பக்ஷம்"

என்றே விரிவுரையும் செய்துள்ளார்.

அங்ஙனமே 'பத்யுரஸாமஞ்ஜஸ்யாத்' என்ற சூத்திரத்தால் மறைமுரணான பாசுபத ஆகமத்தை மறுத்துள்ளார். இவ்வாகம வழியே பதிப்பொருளை வேறுபடுத்துத் துவைதங்கூறி நிற்பாரை, 'அதிஷ்டாநா நுபபத்தேச்ச' என்ற சூத்திரத்தால் மறுத்துள்ளார் என்பதும் உணரற்பாற்று.

இவ்வாறு மறுத்த முனிவருக்குப் பிரமம் அன்றி வேறு பொருள் கிடையாது என்ற ஏகான்மவாதக்கொள்கை உடன்பாடாமோ எனில் ஆகாது என்க. என்னை? குகையின்கண் புகுந்தவை இரண்டு ஆன்மாக்களே; அங்ஙனம் காணப்படலான் எனப் பொருள்தரும் "குஹாம் பிரவிஷ்டா வாத்மாநௌ ஹி தத்தர்சநாத்" என்றுகூறலின் என்க. உயிருக்கு இருக்கையாய உடம்பின் இதயமே உயிருக்குக் குகையாமாறு இறைவனுக்கு இருக்கை (உடம்பு) ஆய உயிரின் இதயமே இறைவனுக்குக் குகையாம் என்பதும் ஈண்டு உணரத் தக்கதே.

இத்திறச் சித்தாந்த நுவற்சியாய் உள்ள பிரமசூத்திரத்தை மாயாவாதநூல் என்றெண்ணி மயங்குதல் கூடாது. எனினும் சர்வாத்ம சம்பு என்பார் தாமியற்றிய சித்தாந்தப் பிரகாசிகைக்கண் சாத்திரப் பிரகரணத்தில் பிரமசூத்திரத்தை மாயாவாத நூல் என்று கொண்டுரைத்தார். அவருரைபிடித்தே மாதவச்சிவஞான யோகிகளும் தமது சிவஞானபோதப் பேருரையில் "வேதாந்தம் என்பது யோகப் பெயரால் வேதத்தின் முடிபாகிய உபநிடதங்களைக் கூறும். உருடிப் பெயரால் அவற்றை எடுத்துச் செய்த ஏகான்மவாத நூலைக் கூறும்" என்று கூறினர். இவர்களைப் பின் பற்றியே ஏனோரும் அதனை ஏகான்மவாத நூலெனக்கொண்டனர்.

(தொடரும்)

மதிப்புரை:

நம் நாட்டுச் சித்தர்கள்

[ஆசிரியர் சென்னை பச்சையப்பன் கல்லூரித் துணைப்பேராசிரியர் திரு. டாக்டர் இரா. மாணிக்கவாசகம் எம். ஏ., எம். லிட்., பி. எச். டி., வெளியிடுவோர்:- அன்னை அபிராமி அருள், 23/6. செல்லம்மாள் தெரு, சென்னை - 600 030. கிரௌன் 1 × 16. 328 பக்கங்கள். விலை ரூ. 12—00. அஞ்சற் செலவு தனி.]

சித்தர்கள் மனத்தை ஒருவழிப்படுத்தி யோகநெறிநின்று இறையொளியைக் கண்டவர்கள். காயசித்தி பெற்றவர்கள் அவர்கள் கண்ட மருத்துவமுறை மிக்க சிறப்புடையது. அவர்களைப்பற்றி முழு விபரங்களையும் ஒருசேரத் தொகுப்பாக அறிந்து கொள்ளுதற்குரிய நூல் இல்லாத குறையை இந்நூல் நீக்குகிறது. ஆறு பெரும் பிரிவுகளில் சித்தர்களைப்பற்றி நன்கு ஆராயப்பெற்றுள்ளது. முதற்பிரிவில் சித்தர் என்ற சொல்லின் விளக்கம் நன்கு ஆராய்ந்து தரப்பட்டுள்ளது. அடுத்து, சித்துபற்றிய இலக்கியங்களில் காணப்படும் குறிப்புக்களை ஆய்ந்து அவர்களது இயல்புகளையும், அனுபவங்களையும் விளக்குகிறது. மூன்றாவதாக இருபத்தைந்து சித்தர்களின் வரலாறு சான்றுகளுடன் தரப்பட்டுள்ளது. அடுத்து, சித்தர்களின் தொடக்க காலத்தைப் பற்றிப் பல்வேறு அறிஞர்களின் கருத்துக்களை எடுத்துக்காட்டி ஏறக்குறைய கி. பி. 5ம் நூற்றாண்டு எனக்கொள்வது ஏற்புடைத்தாகலாம் என்று ஆராய்ந்து தெளிவு செய்யப்பட்டுள்ளது. இறுதிப் பகுதி, சித்தர்கள் உலகிற்குச்செய்த தொண்டுகளை விளக்குகிறது. இதில் சித்தர்களின் இலக்கிய வடிவம், அவைகளில் காணப்படும் பழமொழிகள், தனித்திரு, பசித்திரு, விழித்திரு, மந்திரம், யந்திரம், தந்திரம் முதலியவற்றின் விளக்கங்கள் போன்ற பல்வேறுகுறிப்புக்கள் ஆராயப்பட்டுள்ளன.

எம். லிட். பட்டத்திற்காகச் சிறந்த சித்தராக விளங்கிய இராமலிங்க வள்ளலாரையும், டாக்டர் பட்டத்திற்காகத் திருமூலரையும் ஆராய்ச்சிப் பொருளாகக்கொண்டு ஆய்வுசெய்த ஆசிரியரின் அனுபவ முத்திரைகள் இந்நூலில் ஆங்காங்கு அமைந்துள்ளதைக் காணலாம்.

ஆசிரியரின் அரிய முயற்சியும், நுண்ணிய ஆய்வுத்திறனும் ஒருசேரக்கொண்ட - எளிய இனிய நடையில் எழுதப்பெற்ற இந்நூல் அறிஞர்களின் உள்ளத்தை மகிழ்விக்கும் என்பது உறுதி.

‘அந்தரம் சுத்தியில்லை’

பேராசிரியர், திரு. மு. சிவச்சந்திரன், எம். ஏ.,

“எல்லாம் சிவன்செயல் என்றிருந்தும் நம்மனோர்
கல்லாய்க் கிடக்கும் கருத்தறியார் – புல்லென
வைத்த படியிருந்து வாழாத உள்ளங்கள்
தைத்த படியிருந்த வாறு” (1)

“பக்குவிகள் சொன்னசொல் பாவிநான் கேட்கவில்லை
எக்காளம் செய்கின்றேன் ஈசனே! – தக்கபடி
தண்டம் கொடுத்தோ தகவாய் உரைத்தோஇவ்
வண்டம் உணர்வை நீ!” (2)

“அப்பர்வாழ் நாளில் அனுபவித்த சோகங்கள்
எப்போதும் நம்வாழ்வில் வந்ததில்லை – முப்போதும்
ஆண்டவனின் இன்னருளை அன்பாய் நினைத்ததனால்
தீண்டவில்லை துன்பங்கள் பார்” (3)

“சுந்தரரின் செந்தமிழில் சூழ்ந்தும் பயனென்? உன்
அந்தரம் சுத்தியில்லை நெஞ்சமே! – பைந்தமிழில்
பாட்டும் கதையும் பலகோடி கற்றாலும்
மூட்டையைக் கட்டுகின்றாய் போ” (4)

“ஆராரோ வந்துவிட்டார்! ஆராரோ சென்றுவிட்டார்!
பாரோர் வாழ்ந்தகதை பாராயோ! – ஓராது
கல்லோடும் மண்ணோடும் கட்டிவைத்த மாளிகைபோல்
பல்லாண்டு ஆசைகள் ஏன்?” (5)

“நல்லோர்கள் தாழ்கின்றார்! அல்லோர்கள் வாழ்கின்றார்!
எல்லோரும் ஏசுகின்றார் இக்கோலம் – நல்லதுதான்
தாழ்கின்ற தாழ்வெல்லாம் தன்தலைவன் அன்பென்று
வாழ்கின்ற உள்ளமே வா!” (6)

தருமையாதீன முதற்குரவர் குருபூஜை விழா

4—6—80

அன்று மாலை ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் பக்தர்கள் புடைசூழ குருமூர்த்த வழிபாட்டிற்கு எழுந்தருளுதல்.

தருமையாதீன முதற்குரவர் குருபூஜை விழாவில்

ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள்
ஆதீன ஓதுவா மூர்த்திகளின் திருமுறை முழக்கத்துடன்
பட்டினப்பிரவேசத்திற்கு எழுந்தருளுதல்.

தருமையாதீன முதற்குரவர் குருபூஜை விழாவில்

ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள்
பக்தர்களுடன் பட்டினப்பிரவேசத்திற்கு எழுந்தருளுதல்.
5 — 6 — 80

தருமை ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்களும்
தருமையாதீனத்திற்கு முதன்முதலாக எழுந்தருளிய
மதுரை ஸ்ரீ திருஞானசம்பந்த சுவாமிகள் ஆதீனம்
292 - ஆவது குருமகாசந்நிதானம்
ஸ்ரீலஸ்ரீ அருண்கிரிநாத ஸ்ரீ ஞானசம்பந்த தேசிக
பரமாசாரிய சுவாமிகள் அவர்களும்
20—4—80

திருத்திலதைப்பதித் தலச் சிறப்பு

தருமையாதீனத் தமிழ்ப்புலவர்,

வித்துவான் திரு. வி. சா. குருசாமி தேசிகர் எம், ஏ.,

தென்புலத்தார் எனப்படும் பிதிரர்களுக்குச் செய்யவேண்டிய தர்ப்பணம், சிரார்த்தம் முதலிய கடமைகளைச் செய்தற்குரிய தலம் திலதைப்பதி. இது தஞ்சைமாவட்டத்தில் நன்னிலம் தாலூகாவில் உள்ளது. மாயூரம் திருவாரூர் புகைவண்டித்தொடரில் பூந்தோட்டம் புகைவண்டி நிலையத்துக்கு மேற்கே மூன்று கிலோமீட்டர் தூரத்தில் அரிசிலாற்றின்கரையில் அமைந்து விளங்குகிறது. மாயூரம் திருவாரூர் பேருந்துகளில் செல்வோர் பூந்தோட்டத்தில் இறங்கி மேற்கே அரிசிலாற்றின் தென்கரை வழியே சென்றால் இத்தலத்தை அடையலாம். வண்டிச்சாலை உள்ளது. ஊர் சிதலைப்பதி எனவும், கோயில் இருக்குமிடம் கோயில்பத்து எனவும் வழங்கப்படுகிறது.

தலப்பெருமை :

சோழநாட்டுக் காவிரித் தென்கரைத் தலங்களில் 58 ஆவது திருத்தலம். திருஞானசம்பந்த சுவாமிகள் அருளிய திருப்பதிகம் ஒன்றுள்ளது. ஊர்ப்பெயர் திலதைப்பதி எனவும், கோயிற்பெயர் மதிமுத்தம் எனவும் தேவாரத்தில் குறிக்கப்படுகிறது. திலதர்ப்பண புரி என்னும் பெயர் மருவி திலதைப்பதி என வழங்கலாயிற்று எனக் கூறுகின்றனர். இராம இலக்குமணர்கள் தசரத சக்கிரவர்த்திக்கும் சடாயுவுக்கும் எள்ளும் தண்ணீரும் இறைத்த (திலதர்ப்பணம்செய்த) தலம் எனத் தலப்பெயர்க்காரணம் கூறப்படுகிறது. இதனைக்குறிக்கும் தல ஐதிகச் சிற்பம் கோயிலில் மேற்குப் பிராகாரத்தில் உள்ளது. காசி அரசர் சித்தோஜி என்பவர் தர்ப்பணம்செய்த தலம் எனவும் கூறுவர்.

ஞாயிறு, திங்கள், யானை, சிங்கம், இராம இலக்குமணர்கள், காசி மன்னன், சித்தோஜி வழிபட்ட தலம். சூரியன் வழிபட்டதை,

> " புரவிஏழும் மணிபூண்டியங்குங் கொடித்தேரினன்
> பரவிநின்று வழிபாடுசெய்யும் பரமேட்டிபூர் "

எனத் திருஞானசம்பந்தர் இத்தலத் தேவாரத்தில் குறிப்பிடுகின்றார். யானை, சிங்கம் வழிபட்டதை 'மத்தயானை வழிபாடு செய்யும் மதிமுத்தம்' எனவும் 'மடங்கல்வந்து வழிபாடுசெய்யும் மதிமுத்தம்' எனவும் குறித்தருளுகின்றார்.

கோயிலமைப்பு :

அரிசிலாற்றின் தென்கரையில் சிதலைப்பதி என்னும் ஊரின் மேற்கே ஒரு கிலோமீட்டர் தொலைவில் கோயில்பத்து என வழங்கும் ஊரில் கோயில் உள்ளது. கிழக்கு நோக்கிய சந்நிதி. கோயிலுக்குத் தென்பால் சந்திர தீர்த்தமும், வடபால் அரிசிலாறு தீர்த்தமும் உள்ளன. நாட்டுக்கோட்டை நகரத்தார் திருப்பணியைப் பெற்றுச் சிறந்து விளங்குகிறது கோயில். ஒரு பிராகாரம் மட்டுமே உள்ளது.

திருக்கோயில் வாயிலைக் கடந்தவுடன் கொடிமர விநாயகரைத் தரிசித்துத் திருச்சுற்றை வலம்வருவோம். கன்னிமூலையில் தல விநாயகர் எழுந்தருளியுள்ளார். அடுத்துள்ள மண்டபத்தில் இராம இலக்குமணர் மண்டியிட்டுப் பிண்டம்போடும் நிலையில் அமர்ந்துள்ளனர். பிண்டங்கள் நான்கும் சிவலிங்க வடிவமாக விளங்குகின்றன. அடுத்து விசுவநாதர் எழுந்தருளியுள்ளார். தொடர்ந்து விளங்கும் மண்டபத்தில் முருகனும், அடுத்து மகாலட்சுமியும் எழுந்தருளியுள்ளனர். கிழக்குப் பிராகாரத்தில் நவக்கிரகமும் சந்திர சூரியரும் சமயாசாரியர் நால்வரும் பைரவரும் எழுந்தருளியுள்ளனர். கோஷ்டங்களில் தெற்கே நர்த்தன விநாயகர், தக்ஷிணாமூர்த்தி. மேற்கே மகாவிஷ்ணு. வடக்கே பிர்மா, துர்க்கை ஆகியோர் உள்ளனர்.

கோயில்கர்ப்பக்கிருகம் அர்த்தமண்டபம், மகாமண்டபங்களோடு விளங்குகிறது. மகாமண்டபத்தில் அம்பாள் சந்நிதி உள்ளது. துவாரபாலகரைத் தரிசித்துச் சுவாமி சந்நிதியை அடைகின்றோம். பஞ்சமூர்த்திகள் நடராஜர் சிவகாமி திருவுருவங்கள் இங்குள்ளன.

இறைவன் அருள்பொலியும் சிவலிங்கத்திருவுருவில் அருள்மிகு முத்தீசுவரர் என்ற திருப்பெயரோடு விளங்குகின்றார்.

அம்பிகை அருள்மிகு சுவர்ணவல்லி என்ற திருப்பெயரோடு அழகுக்கு ஒருவரும் ஒவ்வாத வல்லியாய் எழுந்தருளியுள்ளார்.

கூத்தனூர் :

இத்தலத்திற்கு அருகில் உள்ள கூத்தனூரில் விளங்கும் துர்க்கா, லக்ஷ்மி, சரஸ்வதியம்மன் கோயில்கள் தரிசிக்கத்தக்கன. சரஸ்வதியம்மனுக்குத் தனிக்கோயில் பிற இடங்களில் இல்லை. இக்கோயிலைக் கட்டியவர் ஒட்டக்கூத்தரின் பேரனார் ஓவாதகூத்தர் எனக் கல்வெட்டால் அறியப்படுகிறது.

மூர்த்திகள் :

சுவாமி அருள்மிகு முத்தீசுவரர், மந்தாரவனேசுவரர் எனவும் வழங்கப்பெறுகிறார் அம்பாள் அருள்மிகு சுவர்ணவல்லி. தமிழில் பொற்கொடிநாயகி எனக் கூறுவர். தீர்த்தம் சந்திரதீர்த்தம், திருக் கோயிலின் வலப்பக்கத்தில் உள்ளது. அரிசிலாறும் அருகில் உள்ள தீர்த்தமாகும். தலமரம் மந்தாரை. வடக்குப் பிராகாரத்திலுள்ளது. அருள்மிகு அழகீசுவரர் கோயிலுக்கு வெளியே தென்பால் கோயில் கொண்டுள்ளார்.

புராண வரலாறுகள் :

கயிலைமால்வரையில் ஊர்வசியைக்காதலித்த குற்றம்தீரப் பிரமன் வழிபட்டது. சிவவழிபாட்டை மதியாத குற்றந்தீர இலக்குமி பூசித்தது. தம்மை மதியாத தக்கன் வேள்விக்குச் சென்ற குற்றம் தீர அம்பிகை வழிபட்டது. நற்சோதிகன் என்னும் மன்னன் பிதிரர் களுக்குத் திலதர்ப்பணம் செய்தது முதலிய வரலாறுகள் தலபுராணத் தில் கூறப்பட்டுள்ளன. யாழ்ப்பாணம் வதிரி வித்துவான். திரு. சி. நாகலிங்கம் பிள்ளை பாடிய தலபுராணம் உள்ளது.

திருப்பதிக வரலாறு :

சொல்வேந்தரும் சண்பை நல்வேந்தரும் திருவீழிமிழலை பேணு பெருந்துறை ஆகிய சிவதலங்களை வழிபட்டகாலத்தில் திருத்தில தைப்பதியை அடைந்து நிலாமுற்றத்தில் இறைவனைப் பணிந்து பாடியது இத்திருப்பதிகம்.

பொடிகள்பூசிப் பலதொண்டர் கூடிப் புலர்காலையே
அடிகளாரத் தொழுதேத்த நின்ற அழகன்இடம்
கொடிகளோங்கிக் குலவும் விழவார் திலதைப்பதி
வடிகொள்சோலை மலர் மணங்கமழும் மதிமுத்தமே.

கங்கைதிங்கள் வன்னிதுன் னெருக்கின்னொடு கூவிளம்
வெங்கணாகம் விரிசடையில் வைத்த விகிர்தன் இடம்
செங்கயல்பாய் புனலரிசில் சூழ்ந்த திலதைப்பதி
மங்குல்தோயும் பொழில்சூழ்ந் தழகார் மதிமுத்தமே.

மந்தமாரும் பொழில் சூழ்திலதைம் மதிமுத்தமேற்
கந்தமாருங் கடற்காழி யுளான் தமிழ்ஞானசம்
பந்தன்மாலை பழிதீர நின்றேத்த வல்லார்கள்போய்ச்
சிந்தைசெய்வார் சிவன்சேவடி சேர்வது திண்ணமே.

திருச்சிற்றம்பலம்

கட்டுரை எண். 6.

அபிராமி அந்தாதி

புலவர். திரு. K. சந்தானராமன், M A., B. Lit.,
D. P. P. A,. D, U. N. I. U,

" மனிதரும், தேவரும், மாயாமுனிவரும், வந்து சென்னி
குனிதரும் சேவடிக் கோமளமே! கொன்றைவார் சடைமேல்
பனிதரும் திங்களும், பாம்பும், பகீரதியும் படைத்த
புனிதரும் நீயும் என் புந்தி எந்நாளும் பொருந்துகவே. (4)

அ. மனிதரும் தேவரும் .... கோமளமே!

(1) இவ்வுலகத்து மனிதர்கள், மேலுலகத் தேவர்கள், அழிவற்ற முனிவர்கள் ஆகிய முத்திறத்தாரும் அம்பிகையைக் குனிந்து வீழ்ந்து வணங்குகின்றனர்.

(2) சாதாரண மனிதர்கள் அன்றி மனித வடிவில் வாழ்ந்த அவதார புருடர்களான மூவர்முதலிகள் திருக்கடவூர் வந்து வீரட்டானரைப்பாடியிருக்கின்றனர். அருணகிரியாரும் வந்துபாடியுள்ளார்.

(3) மற்றும் கடவூரிலேயே குங்குலியக்கலநாயனர், காரிநாயனர், திருக்கடவூர் உய்யவந்ததேவர் ஆகியோர் தோன்றி வாழ்ந்தனர். அவர்களாலும் வணங்கப்பட்டவள் அபிராமி.

(4) இன்றும், காலனைக் கடிந்த தலமாதலால் பல்லாயிரவர் பல ஊர்களிலிருந்தும் வந்து அபிராமி அம்பிகையை வணங்குகின்றனர். 'மணிவிழா' என்னும் சஷ்டியப்த பூர்த்தியினைப் பலர் இங்குக் கொண்டாடுகின்றனர்.

(5) இவ்வுலகத்து மனிதர்கள் அன்றி விண்ணுலகத்துத் தேவர்கள் இங்கு வந்து அன்னையை வணங்குகின்றனர். பிரமனும், கலைமகளும் வணங்கியது தலவரலாற்றிலேயே குறிக்கப்பெறும்.

(6) அன்றியும், தங்களை அசுரர்களின் தாக்குதலினின்று விடுவித்துக்கொள்ளவும், தங்களது பதவிகள் நிலைக்கவும், அவ்வப்பொழுது தேவர்கள் அம்பிகையை வணங்குகின்றனர். பண்டன்

சண்டன், முண்டன், மகிடன், ஹயக்ரீவன், மது கைடபன் போன்ற பல அரக்கர்களின் கொடுமைகளினின்று தப்ப, அம்பிகையைத் தேவர்கள் வணங்கிப் போற்றிய செய்திகள் தேவிபாகவதம் முதலான புராணங்களில் காணக்கிடக்கின்றன.

(7) இம்மை, மறுமைப் பயன்களை வேண்டிப் போற்றிய மனிதர்கள், பதவி நிலைக்கப் பரவிய தேவர்கள் மட்டுமின்றி இறவாநிலை பெற்ற முனிவர்களும் அம்பிகையை வணங்குகின்றனர். வேறு எந்தக் கடமையும், கவலையும், பிரச்சனைகளும் இல்லாத முனிவர்கள் - துவளாத முனிவர்கள் - அவற்றால் மாயாத முனிவர்கள் அம்பிகை வணக்கத்தையே தங்களது லட்சியமாகக் கொண்டுள்ளனர் அகத்தியர், துருவாசர் போன்ற முனிவர்கள் இவ்வகையில் அடங்குவர்.

(8) 'மாயா முனிவர்' என்றது மார்க்கண்டேயரை எனினும் ஆம்! அவருக்காகவே காலனைக் கடிந்த இடமன்றோ கடவூர். மற்றும் அன்னைக்குரிய இடக்காலே காலனை உதைத்தது. மார்க்கண்டேயர் அமுதீசருக்கு அபிஷேகம் செய்ய ஆகாய கங்கையினையே கொணர்ந்தார். அப்போது கங்கையுடன் 'பிஞ்சிலம்' என்னும் ஜாதிமுல்லையினையும் கொணர்ந்தார் என்பது வரலாறு. அம்முல்லை இன்றும் திருக்கடவூரில் இருக்கக்காண்கிறோம்.

(9) மார்க்கண்டேயர் மரணத்தை வெல்ல இங்கு வந்து வணங்கினார். சிரஞ்சீவியானார். 'என்றும் பதினாறு' என்னும் நிலைபெற்றார். அத்துடன் தனது வழிபாட்டை விட்டுவிடாது மாயா முனிவராக ஆனபின்பும் அமுதீசரையும் அபிராமியையும் வணங்கினார் என்பது கவனிக்கத்தக்கது.

(10) மார்க்கண்டேயரைக் காணவந்த புலஸ்திய முனிவர் அபிராமியை வணங்கியபின், புண்ணியவர்த்தனர் என்ற ஈசனின் திருமேனியினையும் திருக்கடவூர் வீரட்டானத்தில் பிரதிஷ்டை செய்தார் என்பது தலவரலாறு.

(11) தருமை ஆதீனத்தின் அருளாசியுடன் திருக்கடவூர் தேவஸ்தானம் வெளியிட்டுள்ள தலவரலாற்றில் வழிபட்டோர் பட்டியல் கீழ்க்கண்டவாறு தரப்பட்டிருக்கிறது.

"மார்க்கண்டேயர், குங்குலியக்கலயர், காரிநாயனார், சப்த கன்னிகள், சிபி, பிரமன், வாசுகி, சோமசருமன், சிவசருமன், ஏமகிரீடன், இரத்தினகைடன், சந்திரபூடணன், பிரமாதிராசன், இரத்தினாகரன், பஞ்சசூரியர்கள்".

இவர்களில் மனிதரும், தேவரும், மாயாமுனிவரும் அடங்குவர்.

(12) மனிதர், தேவர், மர்யாமுனிவர் ஆகியோர் கூட்டமாக வந்து அன்னையின் அடிகளில் குனிந்து வீழ்ந்து மீண்டும் மீண்டும் வணங்குகின்றனர். அதனால் அன்னையின் திருவடி மிகவும் சிவந்து விடுகிறது. ஆககே, சேவடிக்கோமளமே! என்றார். "அருமறைகள் பழகிச் சிவந்த பாதாம் புயத்தாள்" என்பார் பின்னும்.

(13) அம்பிகையை வணங்கச்சென்ற இந்திரனும் பிரமனும் தங்களது கிரீடங்களைக் கழற்றிக் கீழே வைத்தனர். மதுகைடபரை வதைத்த திருமால் தனது வலிமைமிக்க முடியினைக் கழற்றிவைத்தார். பின் தேவர்களும் அவ்வாறே கழற்றிவைத்தனர். அம்பிகையின் கொலுமண்டபமெங்கணும் தேவர்களின் முடிகள் நிரம்பின. அங்குப் புதிதாக நுழைபவர்களிடமெல்லாம், "வழியினைப்பார்த்துவாருங்கள், கிரீடங்களில் இடறாமல் வாருங்கள்" என்று அன்னையின் பரிவாரங்கள் எச்சரிக்கின்றன. அன்னையின் 'தர்பார்' சிறப்பை 'சௌந்தரியலகரி' இவ்வாறு வருணிக்கிறது. அங்ஙனம் வணங்கிய தேவர்களுடன், மற்றோரும் மறைகளும் வணங்குவதால் அவளது தாமரைத் திருவடிகள் சேவடிகளாயின.

ஆ. கொன்றைவார்............பொருந்துகவே.

(1) மேற்கூறியபடி எத்தேவரும் முடிகழற்றி வணங்கநின்ற முதல்வி, அச்சபை மண்டபத்துக்குச் சிவபெருமான் வருகைதரும் பொழுது மிகவும் 'பரபரப்புடன் தனது இருக்கையினின்றும் எழுந்து மரியாதை செலுத்துகிறாள் என்று அதே சுலோகத்தில் சௌந்தரியலகரி கூறுகிறது. தன்னிடம் எல்லாப்பேராற்றலும், பெருஞ்சிறப்பும் இருந்தும் தனது கணவனுக்குச் செலுத்தும் மரியாதையில் சிறிதும் குறைந்துவிடவில்லை. அவனுடன் இணைந்தே செயல்பட்டு அருள் பாலிக்கிறாள். அதுவே அவளது மற்றொரு சிறப்பாகிறது. ஆகவே அபிராமிபட்டரும் இறைவன் சிறப்பையும் பின்னிரண்டு அடிகளில் குறிப்பிடுகிறார்.

(2) கொன்றை வார் சடையில் விளங்கும் நதி, மதி, அரவு ஆகியவற்றைக் குறிப்பிட்டார். கொன்றைமலர் 'பிரணவம்' என்னும் ஓங்காரத்தின் வடிவுடையது. இறைவன் 'பிரணவஸ்வரூபன்' என்பதைக்காட்ட, கொன்றையினை விரும்பி அணிகிறான். சுருதிகளின் பதி கொண்ட வேரான பிரணவத்தின் உரு திரிபுரசுந்தரி என அறிந்த அபிராமிபட்டர், இறைவனும் பிரணவ வடிவினன் என்பதையும் உணர்ந்து சிவசக்தி பேதமின்றிப் பாடுகிறார்.

(3) கொன்றை, சடை, பிறை, நதி, பாம்பு ஆகிய ஐந்தும் இறைவனின் ஐந்தொழிலையும் குறிப்பிடுவனவாகவும் கொள்ளலாம்.

(4) பிரணவத்திலிருந்து அனைத்தும் தோன்றுவதால் கொன்றை 'சிருஷ்டி'யையும், ஆற்றுப்பெருக்கு உலகூட்டுவதால் காத்தலையும், அந்நதி சடையில் அடக்கப்பட்டதால் மறைத்தலையும், பாம்பு தாருகா வனத்து முனிவர்களால் அழிக்கவே ஏவப்பட்டதால் சம்ஹாரத்தையும், திங்களுக்கு அருள் செய்ததால் அருளலையும் குறிப்பிட்டார் எனலாம்.

(5) குற்றம்பல புரிந்தவராகிலும் தன்னிடம்வந்த கங்கையினைச் சடையில் சூடினுன். ஆணவத்தோடு உலகினை அழிக்கும் நோக்கத்துடன் வந்த கங்கையினைத் தலையில் தாங்கினுன். தன்னை அழிக்கத் தாருகாவனத்து முனிவர்கள் ஏவிய அரவினையும் அணிந்தான். அதுபோல என்னைச் சார்ந்தோருக்கோ, உலகினருக்கோ எதிரிகளுக்கோ, யாவர்க்கேனும் யான் இடுக்கண் விளைத்திருப்பினும் அதனைக்கருதாது, நீங்கள் இருவருமாய் என்னை ஆட்கொண்டு அருளவேண்டும் என்பதும், அம்பிகையின் அன்பர்கள் அதுபோன்ற குறைபாடுகளை நினைவு கூர்ந்து விலக்கக்கடவர் என்பதும் குறிப்பு.

(6) சந்திரனின் கிரணங்கள் குளிர்ச்சியுடையன. சந்திரமண்டலத்தில் இரவுநேர குளிர்நிலை பனிக்கட்டியின் உறைநிலைக்கும் கீழே செல்கிறது என்பது நவீன கண்டுபிடிப்பு. எனவே 'பனிதரும் திங்கள்' என்றது மிகப்பொருத்தமாகிறது.

(7) இறைவன் அணிந்துள்ள அரவு குண்டலினி சக்தியினையும் குறிக்கும் ஏனெனில் அச்சக்தி பாம்புபோல் சுருட்டிக்கொண்டிருக்கும்.

(8) அக்குண்டலினியோகப்படி, அச்சக்தியினை மேலெழுப்பி, அக்னி, சூரிய கண்டங்களைக் கடந்து சோமகண்டத்திற்கும் மேல் நிலையில் காமேஸ்வர காமேஸ்வரி தரிசனம் கிட்டுகிறது. அந்நிலையில் இருவர் தரிசனமும் எப்போதும் அவரது புந்தியில் பொருந்த வேண்டுமென்கிருர்.

(9) 'பகீரதப் பிரயத்தனம்' என்பது உலக வழக்கு. மிகப் பெரிய சாதனையை அல்லது முயற்சியைப் பகீரதப்பிரயத்தனம் என்கிறோம். அதுபோல மிகவும் முயன்றேனும் அன்னையின் அடியவர்கள் அவளது தரிசனத்துக்கு முயல்கின்றனர். பகீரதனின் முன்னோர்களைக் கரையேற்றிய பாகீரதி இறைவன் சடையில் அடக்கம். அவளுடன் இறைவியும் எழுந்தருளின் உலகமே கரையேறிவிடும் அல்லது உய்ந்துவிடுமன்ரோ?

(10) 'அனைவரும் வந்து வணங்கும் சிறப்புடைய நீயும், ஐந்தொழிலியற்றும் ஈசனும் புந்தியில் எப்போதும் பொருந்தியிருக்க

வேண்டுமென்றார். பகீரதனின் சாதனையினைப் புரிந்தாலும், புந்தியை-மனத்தை அடக்கி அதில் இறைவனையும், இறைவியையும் நிலை நிறுத்தல் நம் முயற்சியால் இயலாது. அவர்களேவந்து பொருந்தினால் தான் அது இயலும். அதற்கும் அவர்களது நல்லருளே வேண்டு மென்பது தெளிவு.

(11) அன்னையோ சேவடிக் கோமளம். கோமளம் என்றால் மென்மை என்பது பொருள். மெல்லியலாகிய அவள் வன்மையான புத்தியில் எழுந்தருளமுடியுமா? அதற்கு நம் மனம் - புத்தி மென்மை யாக வேண்டும். இங்கு அபிராமிபட்டரின் கவியில் தானே ஒரு மெலித்தல் விகாரம் நிகழ்கிறது. புத்தியில் இருக்கும் 'த்' 'ந்' ஆக மெலிகிறது. இதுவன்றோ அருட்பாடல்.

(11-A) அல்லது புனிதரும் அவளும் பொருந்தவேண்டுமென்று விழையுமுன்பே 'புத்தி' மென்மையாகி 'புந்தி'யாகிவிடுகிறது.

(12) பாகீரதி உலகினரின் பாவத்தைப்போக்கிப் புனிதமாக்கு கிறது. ஆனால் அதனை அணிந்தவன் இயல்பாகவே புனிதமானவன் கங்கையின் புனிதமும், கொன்றையின் மணமும், பிறையின் குளிர்ச்சி யும், அரவின் நஞ்சும் ஆகியவெல்லாம் அவன் படைத்தவையன்றோ? கொன்றைவார் சடையில் பனிதரும் திங்களும், பாம்பும், பகீரதியும் படைத்த ஈசனாகிய அவனும் நீயும், தாமாகவேவந்து அருள்செய்து என்புந்தியினை மென்மையாக்கி அதில் எழுந்தருளவேண்டுமென் கிறார்.

(13) வீட்டைச் சுத்திசெய்ய அல்லது புனிதமாக்கப் 'புண்யா வாசனம்' என்னும் புனிதமாக்கு விழா நடத்துகிறோம். அதுபோல் நமது உடலாகிய வீட்டையும் புனிதப்படுத்த 'சிவானந்தலகரி'யில் ஆதிசங்கரர் ஒரு வழி சொல்கிறார். "மனம் என்ற குடத்தில் மகிழ்ச்சி என்ற நீரை நிரப்பி, பக்தி என்ற நூலைச் சுற்றி, இறைவன் திருவடி என்ற மாவிலையினைச் செருகி, ஞானம் என்னும் தேங்காயினையும் வைத்து, பஞ்சாட்சரமென்னும் மந்திரம் கூறி உனது உடலாகிய வீட்டைப் புனிதமாக்குக" என்கிறார்.

அவ்வாறே புனிதனாகிய அவனும் அவளும் ஒன்றாகப் புந்தியில் எழுந்தருளின் மனிதவுடலும் புனிதவுடலாகுமன்றோ?

இப்பாடலின் பாராயண பலன் மன ஒருமைப்பாடும், அனை வருக்கும் மேல்நிலை எய்தலுமாகும்.

" ஒருகோட்டன் இருசெவியன்... "

சித்தாந்தப் புலவர்மணி,

திரு. ந. ரா. முருகவேள் M. A., M. O. L.

முன்னுரை :

ஒருசிறந்த கவிதை என்றால் அதன்கண் உவமை உருவகம் முதலிய அணிவகைகளுள். ஏதேனும் ஒன்றுதல் இனிது அமைந்திருத்தல் வேண்டும். " அணியிலாக் கவிதை பணியிலா வனிதை" என்பது பழமொழி ஒரு பெண்ணை அழகுபடுத்த, தோடு வளை சிலம்பு முதலிய பலவகை நகைகள் இன்றியாமையாது வேண்டப்படுதல்போல, ஒரு கவிதை அல்லது செய்யுளைச் சுவைப்படுத்த உவமை உருவகம் முதலிய அணிவகைகள் இன்றியமையாது வேண்டப்பெறும் என்பது மேலைப் பழமொழியின் கருத்தாகும்.

எண் அணி :

செய்யுளுக்கு உரிய அணிவகைகள் பலவற்றுள், எண் அணி என்பது ஒன்று. அஃதாவது ஒன்று இரண்டு மூன்று முதலிய பல எண்கள், ஒரு செய்யுளில் ஏற்ற பெற்றியில், கவிஞன் கையாளும் சொல் சொற்றொடர்களில் கவின்மிக அமைந்து வரும் திறனாகும்.

" ஒன்றவன் தானே; இரண்டவன் இன்னருள்;
நின்றனன் மூன்றினுள்; நான்குணர்ந்தான்; ஐந்து
வென்றனன்; ஆறு விரிந்தனன்; ஏழ்உம்பர்ச்
சென்றனன்; தான் இருந் தான்உணர்ந்து எட்டே "

எனவரும் திருமூலர் திருமந்திர முதற்செய்யுளின்கண், ஒன்றுமுதல் எட்டுவரையில் உள்ள எண்கள், முறையே குறிப்பிடப் பெற்றிருத்தல் காணலாம். இதுபோலவே,

" ஒருகோட்டன் இருசெவியன் மும்மதத்தன்
நால்வாய் ஐங்கரத்தன், ஆறு
தருகோட்டு அம்பிறைஇதழித் தாழ்சடையான்,
தரும்ஒரு வாரணத்தின் தாள்கள்,
உருகுஓட்டு அன்பொடும்வணங்கி, ஓவாதே
இரவுபகல் உணர்வோர் சிந்தைத்
திருகுஓட்டும்; அயன் திருமால் செல்வமும்
ஒன்றோ என்னச் செய்யும் தேவே! "

எனவரும் சிவஞானசித்தியார் காப்பு முதற் செய்யுளும், எண் அணி (எண் அலங்காரம்) என்னும் நலம் அமைந்து அழகுற்று விளங்கு கின்றது. இச்செய்யுளின் பொருள் வருமாறு :

பொழிப்புரை :

"ஒரு தந்தம், இருசெவி, மும்மதம், நால்வாய் (தொங்கின்ற துதிக்கை), ஐந்து கைகள் ஆகியவற்றை உடையவனும், கங்கை யாகிய ஆறு - வளைந்த அழகிய பிறை - கொன்றை மாலை அணிந்த தாழ்சடை - ஆகியவற்றை உடைய சிவபெருமான் பெற்று அளித் தவனும், யானை முகம் கொண்டவனும் ஆகிய விநாயகப்பெருமானின் திருவடிகள், தம்மை உருகிப் பெருகுகின்ற அன்புடன் வணங்கி, இடை யருமல் இரவும் பகலும் நினைத்துத் தியானிப்பவர்களின் அறிவைப் பற்றிய ஆணவமல இருளைப்போக்கி நீக்கும்; அதுமட்டுமேயன்றிப் பிரமன் திருமால் முதலியவர்களின் பெரும் செல்வமும் வாழ்வும் கூட, ஒரு பொருள் ஆகுமோ? என்று இகழ்ந்து ஒதுக்குமாறு, மிக மேலான சிவஞானச் செல்வத்தையும், சிவானந்தப் பெருவாழ்வையும், அவர்கள் எளிதாக அடையச் செய்யும்" என்பது இப்பாடலின் திரண்ட பொருள். இனி இதன்கண் அமைந்துள்ள நுண்பொருட் குறிப்புக்களை ஒரு சிறிது ஆராய்வோம்.

நுண்பொருள்கள் :

(1) விநாயகப்பெருமான், கஜமுகன் என்னும் அசுரனை அழித் தற்கு யானை வடிவில் தோன்றியருளினுர். மேலும், அவன் படை களால் அழியாத வரம் பெற்றிருந்தமையின், தமது தந்தங்கள் இரண்டனுள், வலப்பால் தந்தத்தினை ஒடித்து, அவனைக் கொன்ருர். அதனுல் அவருக்கு 'ஏகதந்தர்' எனப் பெயர் வழங்கும். ஆதலால் 'ஒருகோட்டன்' என்று இங்குக் குறிக்கப்பெற்ருர். இறைவன் ஆண் பெண் அலி ஆகவும், அவை அல்லாமலும் விளங்குவான். அம்முறையில் ஒருபுறம் தந்தம் இருத்தலால் ஆணுகவும், மறுபுறம் தந்தம் இல்லாமையால் பெண்ணுகவும், இங்ஙனம் இருபாலும் ஒரு சேர விரவியிருத்தலின் அலியாகவும், இவற்றுள் எதுவாகவும் தனியே இல்லாமையின் இம்மூவகை நிலைகளைக் கடந்தவனுகவும், விநாயகப் பெருமான் விளங்குகின்ருன் என்பது 'ஒரு கோட்டன்' என்பதனுல் உணர்த்தப்பெற்றது.

(2) விநாயகர், தமது ஏகதந்தமாகிய ஒருகோடு கொண்டு, வியாசமுனிவரின் வேண்டுகோட்படி, மேருமலையில் மகாபாரதம் எழுதினுர் என்பது வரலாறு. எழுத்தர் (Amanvensis) ஆகிய விநாயகர், தாம் எழுதத் தொடங்கும் சிவஞானசித்தியார் நூல் இனிது நிறைவேறுதற்கு அருள்செய்தல்வேண்டி, ஆசிரியர் அவரை "ஒரு கோட்டன்" என்று சிறப்பித்தார்.

(3) இறைவனை வணங்கப் புகுவோர், முதற்கண் அவனது திருவடிகளையே வணங்கப்புகுவர். அதுவே மரபுநெறி. ஆயினும் இங்கு ஆசிரியர் செவிகளைக் குறித்தார். திருஞானசம்பந்தர் 'தோடுடைய செவியன்' என்று தொடங்கியதும் இங்குக் கருதத்தகும். எல்லா உயிர்களுக்குமே இருசெவிகள் உளவேனும், யானைக்கு உள்ள இரு செவிகள் மிகப் பெரியனவாய் (முறம்போல) இருத்தலும், அவைகள் பிரணவம் ஆகிய ஓங்காரத்தின் உருவ அமைப்பினை நினைப்பித்தலும் கருதி, 'இருசெவியன்' என்றார். இரு - பெரிய, இரண்டு. விநாயகர் பிரணவ வடிவினராதல் பற்றியும், பிரணவம் கூறியே வேதாகமம் ஓதுதல் முறையாதல் பற்றியும், "வேதநூல் சைவநூல் என்றிரண்டே நூல்கள்" எனக் கொண்டு, அவற்றைத் தழுவி நூல் இயற்றத் தலைப்படும் ஆசிரியர், ஒருவாற்றால் தாமும் அப் பிரணவத்தினைத் தம் நூலில் தொடக்கத்தில் நினைக்கும் குறிப்பில், 'இரு செவியன்' என்று விநாயகப்பெருமானைத் தியானித்தார்.

(4) பொதுவாக யானைகளுக்குக் கன்னமதம் கபோலமதம் பீஜமதம் என்னும் மும்மதங்கள் பெருகும். அம்முறையில் விநாயகர் இச்சை, கிரியை, ஞானம் என்னும் மதங்களை உடையவராகக்கொண்டு '**மும்மதத்தன்**' என்றார். இதனால் நூல் இயற்றப்புகும் தம்முடைய விழைவு அறிவு செயல் ஆகிய மூன்றனுடன், விநாயகரின் விழைவு அறிவு செயல் ஆகிய மூன்றும் கலந்து இயக்குதல் வேண்டிப் பணிந்தார்.

(5) யானைக்குச் சிறப்பு உறுப்பாகிய தும்பிக்கை இங்கு 'நால்வாய்' எனப்பட்டது. 'நால்வாய்' என்பது, நான்கு என்னும் எண்ணினையும், நாலுதல் (தொங்குதல்) ஆகிய செயலையும் உணர்த்தும் வகையில், இருபொருள் பொருந்தக் குறிக்கப்பெற்றது. யானைக்குக் கை வாய் மூக்கு என்னும் பலவாகவும் ஒருசேரப் பயன்படுவது, '**தும்பிக்கையாகிய நால்வாய்**'. தாம் நூல் இயற்றுதற்குப் பலவகைகளிலும் துணைபுரிதல் வேண்டி, விநாயகரை 'நால்வாய்' என்று ஆசிரியர் நினைவுகூர்ந்தார்.

(6) பொதுவாகத் தெய்வத் திருவுருவங்கள், நான்குகைகளுடன் விளங்கும் இருகைகளை உடைய மனிதர்களின் ஆற்றலைவிட, மிகப் பெரிய பேராற்றல் உடைமையினை விளக்கும் அடையாளமாக, நான்கு கைகளுடன் தெய்வத் திருவுருவங்கள் திகழும். ஆனால் விநாயகர்க்கு ஐந்து கைகள் அமைந்திருப்பது, அவர்தம் தனிப்பெருஞ் சிறப்பை உணர்த்தும். ஆக்கல் காத்தல் அழித்தல் மறைத்தல் அருளல் என்னும் ஐந்தொழில்களையும் செய்தருள வல்லவர் என்பதனை, விநாயகரின் ஐந்து கைகளும் குறிக்கும். கலசம் ஏந்தியகை,

படைப்புத் தொழிலையும்; மோதகம் ஏந்தியகை, அழித்தல்தொழிலையும்; பாசம் ஏந்தியகை, மறைத்தல் தொழிலையும்; தந்தம் ஏந்தியகை, அருளல் தொழிலையும் குறிக்கின்றன.

இனி, விநாயகரின் ஐந்து கைகளும், திருவைந்தெழுந்து மந்திரத்தை உணர்த்துவதாகவும் பெரியோர்கள் கூறுவது உண்டு. அங்குசம் ஏந்திய வலக்கை சிகரம். பாசம் ஏந்திய இடக்கை வகரம். ஒற்றைத் தந்தம் ஏந்திய கை யகரம். மோதகம் ஏந்திய இடக்கை நகரம். துதிக்கை மகரம். இவ்வாறு கொள்ளுங்கால், விநாயகரின் ஐந்து கைகளிலும், சிவயநம என்னும் திருவைந்தெழுத்து மந்திரம் அமைந்து விளங்குதல் தெளியலாம். ஐந்தொழில்புரியும் ஆற்றல் மிக்க விநாயகர், தாம் இயற்றும் நூலை நன்கினிது நிறைவேறச் செய்தருள்வர் என்னும் குறிப்பு அமைய, **ஐங்கரத்தன்** என்றார்.

(7) பேராற்றல் பெற்றிருத்தல் - அடைந்தாரைக்காத்தருளுதல்- தனிப்பெருந்தலைமையில் திகழ்தல் - எளிவந்தருளும் இயல்புடைமை என்பன, தலைவர் எனப்படுவோர்க்குரிய சால்பு நலங்களாகும். இவையனைத்தையும் உடையவன் சிவபெருமான் என்பதனை வலியுறுத்த "**ஆறு தருகோட்டு அம்பிறை இதழித் தாழ்சடையான்**" என்றார்.

நில்லாத நீர் சடைமேல் நிற்பித்தமை, பேராற்றல். திருவடியில் விழுந்து பணிந்த சந்திரனைச் சடையில் அணிந்து வாழ்வித்தமை, அடைந்தாரைக் காத்தருளும் பேரருள். இதழி (கொன்றைமலர்) அணிந்தமை, பிரணவப் பொருளுக்குத் தானே உரியவனாதும் தனிப்பெருந் தலைமை. தாழ்சடையனாதல் எளிவந்தருளும் இயல்பு.

(8) கங்கையின் செருக்கை அடக்கியும் பிறையை வாழ்வித்தும் முறையே கொடியோர்த்தெறுதலும், செவ்வியோர்க்கு அளித்தலும் (துஷ்டநிக்கிரகமும், சிஷ்டபரிபாலனமும்) செய்த பெருமான் என்று உணர்த்த "ஆறு தருகோட்டு அம்பிறை இதழித் தாழ்சடையான்" என்றார் எனினுமாம்.

(9) மகனறிவு தந்தையறிவு ஆதலின், சிவபெருமானாகிய தந்தையின் பெருமையைக்கூறி, விநாயகரின் பெருமையைச் சிறப்புற விளக்கினார்.

(10) முதன்முதலில் மனித இனம், உலகின் நடுப்பகுதியில், தமிழ்நாட்டில், மலைப்பகுதியாகிய குறிஞ்சித் திணையில்தான்தோன்றியது என்று, சர்ஜான் எவன்சு (Sir John Evans) முதலிய அறிவியல் ஆராய்ச்சியாளர்கள் கூறுவர். யானை குறிஞ்சித்திணைக்குரிய கருப்பொருள்களுள் ஒன்று. குறிஞ்சிநிலத்தில் தோன்றி வாழ்ந்த மனிதன்,

யானையைக்கண்டு வியப்பும் நயப்பும் எய்தினன். அதனல் தான் வழிபடும் கடவுளையும், (Therianthropic god) யானையின் உருவம் உடையதாகக் கருதினன். (1) யானை வடிவால் பெரியது. கடவுள் இயல்பால் பெரியவர். (2) யானை வலிமை மிகுந்தது. கடவுள் ஆற்றல் மிக்கவர். (3) யானை அன்புசெய்தற்கும், அச்சப்படுதற்கும் உரியது; கடவுளும் பயபக்திகளுக்கு உரியவர். (4) யானை நலம்புரிந்து பழகினல் எளிவந்து உதவிகள் புரியும். அதுபோலக் கடவுளும் தன்பால் அன்பு செய்பவர்களை அருள்புரிந்து காப்பர். (5) யானை தன்பாற் குறும்பு செய்பவர்களைச் சினந்து ஒறுக்கும்; கடவுளும் தன்னை நினையாது கெடும் தீயவரைக் கடிந்து ஒறுப்பர். இங்ஙனம் ஒருவகையில் யானையின் இயல்புகளோடு ஒத்த இயல்புடையவராகக் கொள்ளப்பட்ட கடவுளே விநாயகர் எனப் போற்றப்பெற்ருர். வாரணத்தின் (யானையின்) முகம் உடைய விநாயகர், வாரணம் (யானை) என்றே சுட்டிச் சிறப்பிக்கப்பெற்ருர்.

(11) பிற யானைகள் அங்குசத்தால் அடக்கிப், பாசத்தால் கட்டப்பெறும். விநாயகர் அத்தகையர் அல்லர் ஆதலால், தாமே தம் கைகளில் அங்குசமும் பாசமும் ஏந்தியுள்ளார். யானைக்குப் பாகனுகிய தலைவன் ஒருவன் இருப்பான். அவன் யானையை இயக்குவான். அங்ஙனமின்றி விநாயகர் ஆகிய யானை, தாமே தலைவராய்த் தமக்குத் தலைவ்ராவார் எவரும் இல்லாமல், எல்லாரையும் எல்லாவற்றையும் இயக்கியருள்வர். ஆதலின் ஒப்புயர்வற்றதனிச் சிறப்புள்ள யானை என்னும் கருத்தில், அவர் 'ஒரு வாரணம்' எனப்பட்டார்.

(12) முகத்தால் யானையாயினும், குறுந்தாள்களால் பூதகணமும், உடலால் மனிதகணமும், கைகளால் தேவகணமும் ஆக விளங்குதல்பற்றி, விநாயகரை "ஒரு வாரணம்" என்ருர் எனினும் அமையும்.

(13) விநாயகரின் இருதாள்களும் முறையே முற்றறிவு, முற்றுத் தொழில் எனப்படும். சிவஞானசித்தியார் ஆகிய நூலை இயற்றத் தமக்கு முற்றறிவும் முற்றுத்தொழிலும் அமைதற்பொருட்டு, விநாயகரின் திருவடிகளை "ஒருவாரணத்தின் தாள்கள்" என்று சிறப்பித்தார்.

(14) வணங்குதல் இன்றியமையாதது என்பதும், அதன் இயல்பு இஃது என்பதும் கூறுவார், "உருகு ஒட்டு அன்பொடும் வணங்கி" என்ருர். வணங்குதற்கு உருக்கம் நிகழவேண்டும்; உருக்கம் நேர்ந்தால் அது பெருக்கமாகும்; உருக்கமும் பெருக்கமும் அன்பின் காரண காரியமாய் நிகழும். இதனை உணர்த்த அன்பினை "உருகு ஒட்டு அன்பு" என்ருர். 'ஒடு' என்பன எதுகைநோக்கி

'ஒட்டு' என்று வந்தது. உருகு - ஒடு என்பன, முதல்நிலைத் தொழிற்பெயர்களாய் முறையே உருகுதல் ஓடுதல் (பெருகுதல்) என்னும் பொருள் குறித்தன.

(15) உருகிப் பெருகும் அன்புடையவர்களை "உணர்வோர்" என்றார். உணர்தல் - நினைத்தல், தியானித்தல். தியானித்தல் இடையருது நிகழவேண்டும் என்பார். 'ஓவாதே' என்றும், 'இரவு பகல் ஓவாதே' என்றும் விளக்கமாகக் குறிப்பிட்டார். இரவு பகல் ஓவாது நினைத்துத் தியானித்தலையே,

"நெஞ்சம் உமக்கே இடமாக வைத்தேன்
நினையாது ஒருபோதும் இருந்தறியேன்"

என்று, தமது திருவதிகைவீரட்டானத்துத் தேவாரத் திருப்பாடலில், திருநாவுக்கரசர் பெருமானும் விதந்தெடுத்து விளங்க மொழிந்தருளினார். இரவு பகல் ஓவாது நினைத்தலாவது - துன்பம் ஆகிய இரவு ஏற்படினும், இன்பம் ஆகிய பகல் நிகழினும், முன்னையதற்குத் தளர்ந்தும், பின்னையதற்கு மகிழ்ந்தும் இறைவனை மறவாது போற்றுதல் எனினுமாம்.

(16) இங்ஙனம் இரவு பகல் ஓவாது (ஓய்வின்றி) உணர்ந்தால் அவ்வுணர்தலின் பயன் யாது என்பார்க்குச் "சிந்தைத் திருகு ஓட்டும்" என்றார். திருகு, திருக்கு - மாறுபாடு, கோணல்.

"பெருக லாம்தவம் ; பேதைமை தீரலாம் ;
திருகல் ஆகிய சிந்தை திருத்தலாம் ;
பருக லாம்பரம் ஆயதோர் ஆனந்தம் ;
மருக லான் அடி வாழ்த்தி வணங்கவே"

எனவரும் திருநாவுக்கரசரின் பிறிதொரு சிறந்த தேவாரப் பாடலும், ஈண்டு நாம் இயைபுநோக்கிச் சிந்தித்து இன்புறத்தக்கது.

(17) "சிந்தைத் திருகு ஓட்டும்" என இம்மைப் பயன் கூறியவர், "அயன் திருமால் செல்வமும் ஒன்றோ என்னத் தேவே செய்யும்" என்று மறுமைப் பயனும் உடன் கூறினார், ஒன்றோ என்ன - ஒரு பொருளோ என்று சொல்லி வெறுத்து இகழ. "நறுங் கொன்றைத் தொங்கலான் அடியார்க்குச் சுவர்க்கங்கள் பொருளலவே" என்று சம்பந்தரும், "அண்டர் வாழ்வும் அமரர் இருக்கையும் கண்டு வீற்றிருக்கும் கருத்தொன்றிலோம்" என அப்பரும் அருளிச்செய் திருத்தல் காண்க. 'ஒன்றோ' என்னும் ஒகாரம், ஒன்றன்று என்னும் எதிர்மறைப் பொருளில் வந்தது. தேவே செய்யும் - மிக மேலான

சிவமாம் தன்மைப் பெருவாழ் வினையே அடையச்செய்யும். 'தேவே' என்பது விளிவேற்றுமை அன்று. இரண்டன் வேற்றுமைச் செயப் படுபொருள். தேவு - சிவத்தன்மை. இதனால் விநாயகர் வழிபாட்டின் பயன் கூறப்பட்டது.

(18) இனி இறுதியாகப் பிறிதொன்றும் இங்குக் கருதுவதற்கு உரியது. சிறந்த பெரியோர்கள், என்றும் யாண்டும் கூறியதனையே மீண்டும் கூறுவாரல்லர். இன்றியமையாமையாற் கூற நேர்ந்த வழியும், அதனைப் புதுமையும் சுவைமையும் தோன்றவே கூறுவர். அதற்கேற்ப ஆசிரியர் இவ்விநாயக வணக்கமே பரபக்கத்திலும் கூறி னர் ஆயினும் கூறியதே கூற விரும்பாமல்,

" ஐங்கர நாற்றோள் முக்கண் இரு பாதப்
பரியதொரு நீள்கோட்டுப் பெரிய பண்டிக்
கயந்தன் அடிக்கமலங்கள் நயந்து போற்றிக்
கருத்திலுற இருத்திமிகக் காதல் செய்வாம் "

என்று இச்செய்யுளில் வேறுபடவும் நயமுறவும் அருளிச்செய்திருத்தல் அறிந்து இன்புறத்தக்கது. புறச்சமயங்களை மறுக்கும் பரபக்கமாதலின் 5—4—3—2—1 என்று அங்கு இறங்குமுகமாகவும், தம் சமயக் கொள்கையினை நிலைநிறுவும் சுபக்கமாதலின் 1—2—3—4—5—6 என்று இங்கு ஏறுமுகமாகவும், விநாயக வணக்கச் செய்யுட்களை ஆசிரியர் அருள்நந்தி சிவனார் அமைத்திருக்கும் அருமைப்பாடு, பெரிதும் வியந்து மகிழ்தற்குரியது.

முடிவுரை :

சிவஞானசித்தியார் என்னும் செந்தமிழ்த் தத்துவஞானநூல், எத்துணை நுட்பமும் திட்பமும் சுவைமையும் புலமையும் அமைந்து விளங்குவது என்பதனை யாவரும் இனிது உணர்தற்கு எண்ணணி யில்அமைந்த இந்த நுண்ணியற் செய்யுளே போதிய சான்றாகும். இத்தகைய சிறந்த இனிய சிவஞானசித்தியார் என்னும் தெய்விகத் தத்துவ ஞானத் 'தமிழ்நூலை' நம் தமிழர் அனைவரும் நயந்தினிது கற்றுப் பயன்கொண்டு, வையத்து வாழ்வாங்கு வாழ்வார்களாக.

சங்க நூல்களில் அற்புதங்கள்

வித்துவான். திரு. மு. வைத்தியநாதன், திருச்சி.

முன்னுரை :

சைவசமயத்தை இடைக்காலத்தில் வளர்த்தவர்கள் நால்வர் பெருமக்கள். அவர்கள், நாட்டுமக்களிடையே தம் சமயம்பற்றிய விழிப்புணர்வை உண்டாக்கியவர்கள். தம்முடைய சான்றாண்மை மிக்க செயல்களால், மக்கள் போற்ற வாழ்ந்தவர்கள். அவர்கள் அருளிய அருட்பாடல்கள், அற்புதங்கள் பலவற்றை நிகழ்வித்துள் ளன. இடைக்காலத்தில் இச்சமயச் சான்றோர்கள் நிகழ்த்திய அற்பு தங்கள் போலவே, தொல்காப்பியர், திருவள்ளுவர், கபிலர், இளங்கோ வடிகள் முதலிய தொல்லாசிரியர்கள் வாழ்ந்த சங்ககாலத்தும் பல அற்புதச் செயல்கள் நிகழ்ந்துள்ளன. அவைகளில் சிலவற்றைக் குறிப்பிடுவதே இந்த வரைவின் நோக்கம் ஆகும்.

அற்புதங்கள் :

அருநிகழ்ச்சிகள், அருஞ்செயல்கள், விழுப்பங்கள், அற்புதங்கள் என்பன ஒரு பொருள் தொடர்கள்போல் தோன்றினும், இவைகள் பொருள் நுட்பத்தால் வேறுபாடு உடையன என்பதை ஆழ்ந்து ஆராய்ந்தால் அறியலாம். இயற்கையியலில் அரிதாகத் தன்னியல் பில் நடைபெறும் நிகழ்ச்சிகள், அருநிகழ்ச்சிகள் எனப்படும். சாம்பவி, கேசரி யோக ஆற்றலுடைய, மனிதவடிவில் மிகவுயர்ந்த நிலையில் இருப்பவர்கள் செய்திடும் செயல்கள், அருஞ்செயல்கள் எனப்படும். கல்வி, அறிவு, ஒழுக்கங்களால் சிறந்த புலத்துறை முற்றிய சான்றோர் கள் நிகழ்த்துவன, விழுப்பங்கள் எனப்படும். இறையருள் பெற்ற பெரியோர்களாலும், கடவுளர்களாலும் உலக உயிர்கள் உய்தற் பொருட்டே நிகழ்த்தப்பெறுவன அற்புதங்கள் எனப்படும்.

சிவபக்தன் செங்கணான் :

கோச்செங்கணான் ஒரு சோழமன்னன். சிறந்த சிவபக்தன். பல திருக்கோயில்களைக் கட்டியவன். திருஆனைக்காவில் உள்ள, அன்னை அகிலநாயகியின் திருக்கோயிலைப் பல அற்புதங்கள் நிகழ்த்தி உருவாக்கியதாக அவன் வரலாறு கூறும். சுந்தரர் பெருமான் இவன் சிறப்பினை நினைந்தே சிவனடியார் அறுபத்துமூவரில் இவனையும் ஒருவ ராகச் சேர்த்துப் பெருமைப்படுத்தியுள்ளார்.

பெருஞ்சேரல் இரும்பொறை :

சேரமான் கருவூரேறிய ஒள்வாட் கோப்பெருஞ்சேரல் இரும்பொறை என்ற ஒரு சேரமன்னன் இருந்தான். அவன் தவத்திரு உடையான். தெய்வ ஒளி வீசும் உடலினை உடையான். தம்மிடம் குறை உடையவர்கள், அவனைக்கண்ட அளவிலேயே அவை நீங்கி நலன் பல எய்தினர் என்று, அவன் வரலாறு தெளிவுபடுத்துகிறது. நரிவெரூஉத்தலையார் என்ற ஒரு புலவர், மனிதவடிவில் வேறுபட்ட-கண்டவர் வெறுக்கும் உடலினை உடையவராக இருந்ததாகவும், அவர்பால் இரக்கங்கொண்ட சான்றோர் ஒருவர், அவரைப் பெருஞ்சேரல் இரும்பொறைபால் சென்று, அவன் காட்சிபடும்வகையில் இருக்க வழிப்படுத்தியதாகவும், அவன் காட்சி கிடைத்த அளவில், புலவரின் மேனி வேறுபாடுநீங்கியதாகவும், தமது அழகிய பழைய உடம்பினைப் பெற்று, அரசத்திருவுடைய அவன் தவநலன் மேலும் வளர வாழ்த்தியதாகவும் புறநானூற்றில் காணப்படும் செய்தி நம்மை மகிழ்ச்சியில் ஆழ்த்துகின்றது.

முனிவர் இயல்பு :

நக்கீரர் அருளிய திருமுருகாற்றுப்படையில் திருவாவினன்குடி சிறப்பிக்கப்படுகின்றது. அங்கு வாழும் முனிவர்கள், வெண் சங்கு போன்ற நரைமுடியினர்; மான் தோல் அணிந்த உடலினர்; என்பு எழுந்து இயங்கும் தோற்றத்தினர்; நண்பகல் பலவுடன் கழிந்த உண்டியர்; இகலொடு செற்றம் நீக்கிய மனத்தினர்: யாவதும் கற்றோர் அறியா அறிவினர்; கற்றோர்க்குத் தாம் வரம்பாகிய தலைமையர்; காமமொடு கடுஞ்சினங்கடிந்த காட்சியர்; இடும்பையாவதும் அறியா இயல்பினர்; மேவரத் துனியில் காட்சி முனிவர் என்று போற்றப்படுகின்றனர். அவர்கள் கூற்றங் குதித்தலும், ஒன்னார்த் தெறலும், உவந்தாரை ஆக்கலும், வேண்டிய வேண்டியாங்கு எய்தலும் வாய்ந்தவராய்ப் பல அருஞ்செயல்கள்செய்து வாழ்ந்தனர் என்று காணப்படும் பகுதி நம்மைச் சிந்திக்கவைக்கின்றது.

இருடிகள் ஆணை :

சங்க இலக்கியமாகிய பத்துப்பாட்டுள், பெரும்பாணாற்றுப்படை ஒரு பாட்டாகும். அதில், தவமுனிவர்களுக்கு யானை முதலிய விலங்குகளும், சிற்றுயிர்களும் கல் முதலிய உயிரில் பொருள்களும் வயமாகியும் இயல்பு திரிந்தும் நடந்துள்ளன என்னும் செய்தி காணப்படுகின்றது. ‘தவமுனிவர்களின் இருக்கையில் விழும் உலர்ந்த இலைகளைக் குரங்குகள் அப்புறப்படுத்தி இடத்தைத் தூய்மைசெய்கின்றன. மானும் புலியும் தம் இயல்புமாறித் துயில்கொள்கின்றன.

யானை, முனிவர்கள் செந்தீ வேட்டற்கு விறகுகொணர்ந்து கொடுக்கின்றது". "மந்தி சீக்கும் மாதுஞ்சு முன்றிற், செந்தீப் பேணிய முனிவர் வெண்கோட்டுக், களிறுதரு விறகின் வேட்கும் ஒளிறிலங் கருவிய மலை" என்னும் வரிகள் மேற்கூறிய செய்திகட்குச் சான்றுகின்றன. இதன் உரையில் நச்சர் 'மந்தி சீத்தலும், மா துஞ்சலும், களிறு விறகுதருதலும் இருடிகள் ஆணையால் நிகழ்ந்தன என்று உணர்க" என்று எழுதியுள்ளார்.

யானை ஏவல் செய்தல் :

இக்கருத்துடைய செய்தி புறநானூற்றிலும் காணப்படுகின்றது. "கானயானை தந்த விறகில், கடுந்தெறற் செந்தீ வேட்டுப், புறந்தாழ் புரிசடை புலர்த்துவோனே" என்னும் பாடற்பகுதி உரையில், கானயானை தந்த விறகு என்றது. இவன் தவமிகுதியான் அதுவும் ஏவல் செய்தல் என்னும் செய்தி விளக்கப்பட்டுள்ளது. இவைகளால் நிறைமொழி மாந்தர் தம் பெருமைகளை உணரலாம்.

ஆர்வநன்மொழி ஆய் :

கடையெழுவள்ளல்களில் ஒருவன் ஆய் அண்டிரன். அவன் பொதியின்மலைத் தலைவன். சங்ககாலத்தில் இருந்த சிவனடியான். இவனிடம் ஒரு பாம்பு கட்டுப்பட்டிருந்தது. அது இவனுக்கு நல்கிய நீலப்பட்டாடையை ஆலமர் செல்வர் மகிழ அளித்து மகிழ்ந்தவன்.

" நீல நாகம் நல்கிய கலிங்கம்
ஆலமர் செல்வர்க்கு அமர்ந்தனன் கொடுத்த
சாவந் தாங்கிய சாந்துபுலர் திணிதோள்
ஆர்வ நன்மொழி ஆய் "

என்னும் புறப்பாட்டால் இவ்வற்புதப் பெருமையைத் தெளியலாம்.

நடுகல் இடந்தருதல் :

அறந்துஞ்சும் உறையூரில், அரசு செலுத்தியவன் கோப்பெருஞ் சோழன். அவன் தன்புதல்வர் செயல் காரணமாக வடக்கிருந்து உயிர்விடும் செயலை மேற்கொண்டான். அவனைக்காணப் பொத்தியார் என்ற புலவர் வந்தார். சோழன், வடக்கிருந்து உயிர்நீத்து நடுகல்லாகியுள்ள இடஞ்சென்று. தாமும் வடக்கிருக்க, இடம்வேண்டினர். அக்கல், தன்னருகில், நிலந்தர, அதுகண்ட பொத்தியார் வியந்தார்.

" நிலைபெறு நடுகல் ஆகியக் கண்ணும்
இடங் கொடுத்தளிப்ப மன்ற; உடம்போடு
இன்னுயிர் விரும்பும் கிழமை "

என்னும் தொடரால், கல்லான சோழன் செய்த அற்புதம் நம்மை வியக்கச்செய்கின்றது.

நக்கீரர் பாடிய அறம் :

செந்தமிழ் மொழியைத் தீது என்று இகழ்ந்து பேசிய 'குயக் கொண்டான்' என்னும் கயவன் ஒருவனைக் கடைச்சங்கப் புலவருள் ஒருவராகிய நக்கீரர் ஒருமந்திரச் செய்யுள் கூறி இறப்பித்தார் என்றும், பின்னர் அதனையே வேறுவடிவின் மாற்றிக்கூறி உயிர்ப்பித்த அரு நிகழ்ச்சியும் நடந்துள்ளது.

சொல்லாணையின் பயன் :

கழாத்தலையார் என்னும் புலவர் ஒருவர் ஒருகால், குறுநில மன்னன் ஒருவனைக் காணச்சென்றார். அவன் புலவரை மதிக்கவும் இல்லை ; பொருளும் வழங்கவில்லை. அவ்வளவில், புலவர் இகழ்ந்து பாடினார். அதன்பயன், அம்மன்னன் தன் 'அரையம்' என்னும் ஊர் அழிந்துபோக, நிலைகுலைந்தான். புலவரின் சொல்லாணை விழுப் பத்திற்கு இஃது ஓர் அரிய சான்றாகும்.

> " நீடுநிலை அரையத்து கேடுங் கேளினி
> புகழ்ந்த செய்யுள் கழாத் தலையை
> இகழ்ந்ததன் பயனே " — கபிலர்.

தீயும் சுடாது :

அப்பரடிகளைச் சமணர்கள் நீற்றறையில் இட்டனர். தீயும் இட்டனர். அத்தீ அவருக்குக் குளிர்ந்த பொய்கைபோல் தோன்ற துன்பமின்றி இருந்தார் என்று பெரியபுராணம் கூறும். மணிமேகலை யில், சாதுவன் கலங்கவிழ்ந்து இறந்ததாகச் செய்திகேட்டு, அவன் மனைவி ஆதிரை, தீமூட்டி, அதில் இறங்க, அத்தீ யாதும் ஊறுசெய்ய வில்லை. "விரைமலர்த் தாமரை ஒருதனியிருந்த, திருவின்செய் யோள்போன்று இனிது இருப்ப" இருந்ததாகக் கூறப்பட்டுள்ளது.

இளங்கோ கூறுவன :

முற்றத்துறந்தபட்டினத்தடிகளுக்கு, அவர் தமக்கையார்கொடுத்த நஞ்சுகலந்த அப்பத்தை, அவள் வீட்டின்மேல் எறிய, அது அழல் பற்றி எரிந்ததாக அறிகிறோம். அதுபோல, கண்ணகி தன் இடநகிலை கையால் திருகி, மதுரைமாநகர்மேல்வீச, அது ஊழித்தீயெனப்பற்றிய தாகவும் அறிகிறோம்.

இளங்கோவடிகள், பத்தினிப்பெண்டிர்பற்றிக் கூறும் அருஞ் செயல்கள் நினைந்து மகிழ்தற்பாலன. வன்னிமரமும் மடப்பள்ளியும் இயங்கச்செய்திருக்கின்றனள். நீரலைகளை ஒரெல்லையில் இருத்தியுள்ளனள், தன் கணவனைக் கடல் அளிக்கப்பெறுகின்றனள். தன் காதலன் பிரிந்தவிடத்துக் கல்லுருவாகிப் பின், அவன் திரும்பிவந்த போது, முன்னுருவம் பெறுகின்றனள். இறந்த குழந்தையை உயிர்ப்பிக்கின்றனள். தன் கணவன் பிரிவில், வேருெருவன் தன்னை உற்று நோக்குதல்கண்டு, தன் அழகிய திருமுகத்தைக் குரங்குமுகமாகவென உருமாற்றிக்கொண்டிருந்து, கணவன் திரும்பியபின், தன் முகம் எய்துகின்றனள்.

முடிவுரை :

சங்கநூல்களில் யாண்டும் காணப்படும் வியத்தகு செயல்கள் நம் சிந்தனையோட்டத்தை மேலும் விரைவுபடுத்துகின்றன. அவைகளை அறிந்து ஆய்தல் நம்மனோர் கடமையாகும்.

அன்னை அருள்மாலை

திருமுறைக்கலாநிதி

வேலூர் திரு. க. சொக்கலிங்க ஓதுவார்.

இச்சைவைத் துத்தொழும் திருமாணி குழிவிற்
  றிருக்குமா ணிக்கவல்லி
 எண்திசை புகழ்திருப் பாதிரிப் புலியூர்
  எழிலார் பெரியநாயகி
சச்சிதா னந்தசிவ னுறையுமுண் டீச்சுரம்
  தங்கும்கா னர்குழலியே
 தவத்தவர் வந்துபணி புறவார்ப னங்காட்டூர்த்
  தலத்தினிற் புறவம்மையே
பிச்சைநுக ரும்பிரான் உறைதிரு வாமாத்தூர்
  பேசிடும் முத்தாம்பிகை
 பெரும்புகழ் கொண்டபெரு மான்மகிழண் ணமலைப்
  பேணிவாழ் உண்ணமுலை
பச்சைமால் தங்கையே பகரிமயப் பாவையே
  பண்ணிலுறு பெண்ணமுதமே
 பஞ்சின்மெல் லடியிணையைத் தஞ்சம் அடைந்தென்றும்
  பணிவேற் கருள் அன்னையே. (30)

கடிதம்

VISHVA HINDU PARISHAD

TAMILNADU

Provincial Office:

37, Aravamuthu Garden Street, Egmore, Madras - 600 008.

* * எல்லாம்வல்ல இறைவனின் திருவருளாலும் ஸ்ரீலஸ்ரீ குரு மகாசந்நிதானம் அவர்களின் ஆசியாலும் ஆதரவாலும் எங்கள் பயிற்சி முகாம் இனிதாக நிறைவுபெற்றது.

தருமை ஆதீனத்தில் நடைபெற்ற இப்பயிற்சி முகாமானது, தமிழகத்தில் பரிஷத்தின் வளர்ச்சியில், குறிப்பிடத்தக்கதொரு நிகழ்ச்சியாகும். பயிற்சி முகாமைக் குருமகாசந்நிதானம் திருவருள் கூர்ந்து துவக்கிவைத்து, நிறைவு விழாவிலும் பங்கேற்று, ஒவ்வொரு ஊழியருடனும் நேரடியாகத் தொடர்புகொண்டு ஆசி வழங்கியது நாங்கள் பெற்ற பெரும் பாக்கியமே.

இப்பயிற்சி முகாமிற்காக மகாசந்நிதானம் எல்லா வசதிகளையும் செய்துதந்து, நிகழ்ச்சிகளிலும் பங்குகொண்டது, பரிஷத் ஊழியர்கள் அனைவருக்கும் ஊக்கத்தையும் உற்சாகத்தையும் அளித்துள்ளது. நிறைவு விழாவில் குருமகாசந்நிதானம் வழங்கிய அருள்வாக்கு இந்த இந்து சமுதாயத்திற்கு விடுத்த ஓர் அறைகூவலாகப் பரிஷத் தொண்டர்கள் கருதுகின்றனர்.

நமது தொண்டர்கள் திருமடத்தில் தங்கியிருந்த நாட்களில், ஏதேனும் சிறு குறைகள் ஏற்பட்டிருந்தால், குருமகாசந்நிதானம் பொறுத்தருளுமாறு மிகவும் தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன்.

விஸ்வ ஹிந்து பரிஷத் சார்பிலும், உறுப்பினர்கள் மற்றும் தொண்டர்கள் சார்பிலும், குருமகாசந்நிதானம் அவர்களுக்கும், திருமடத்திற்கும் நன்றியையும் வணக்கத்தையும் தெரிவித்துக்கொள்கிறேன். * *

5—6—80 **வேதாந்தம்**

வாழ்த்துப் பாடல்கள் :

செந்தமிழ்ச்செல்வர்,

திரு. கி. வா. ஜகந்நாதன் எம். ஏ.

சைவத்தின் திறம்விளங்கத் தண்டமிழின் வளம் சிறக்கச்
சற்றும் ஓயாத்
தெய்வத்தின் அருள்மலியப் பலபணிகள் செய்துவரும்
சீர்த்தி சான்று
மெய்வைத்த புகழ்வளர்க்கும் திருத்தருமை ஆதீனம்
விளங்கச் செய்யும்
உய்வைத்தந் திடும்ஆசா ஞய்விளங்கும் பெருமையுள
ஒருவ கேண்மோ. (1)

பண்முகந்த பாடல்களின் பரிசுமிகப் பெற்றிலங்கிப்
பண்பு சான்று
சண்முகதே சிகப்பேரை யாவர்களும் நவிலவரும்
தனிச்சீர்த் தேவே
உண்முகந்த களிப்போடும் ஆங்கடைந்து குருபூஜை
உளுற்றும் நாளில்
எண்முகந்த என்கடமை ஆற்றலாம் எனஉள்ளத்
தெண்ணி நின்றேன். (2)

என்ருலும் திருவருளின் திறம்வேருய் இருப்பதனுல்
எளியேன் இன்று
குன்ருநின் றிடும்உடல நலிவினுல் துன்புற்றேன் ;
குறித்த செய்கை
ஒன்றேனும் செயஇயலா திருக்கின்றேன் ; ஆதவினுல்
ஊங்கே வந்து
பொன்ருத பணிபுரிய கில்லேனுய் இருக்கின்றேன்
பொறுக்க நீயே. (3)

தருமையினில் பேரவையில் வந்துரையைப் பேசுதற்குத்
தகுதி யில்லேன் ;
அருமைபெறும் நினதருளிற் குளித்தின்பம் அடைவதற்கோர்
அமைதியில்லேன் ;

பெருமைபெறும் கருணையினால் என் நிலையை நனிவுணர்ந்து
பேணல் வேண்டும் ;
தருமம்வளர் தரப்பணிகள் ஆற்றுதலில் மிகஉயர்ந்த
தவநல் வேந்தே. (4)

உடல்நிலைநன் கமைந்தபின்னர் அவண்வந்து தரிசித்தே
உய்வேன் ; நின்றன்
அடல்நிலைகொள் ஆசியினால் என்உடலம் நனிநலம்பெற்
றுரும் வண்ணம்
கடல்நிலைகொள் கருணையினால் ஆசிதந்து பிரசாதம்
கருதி உய்ப்பாய் ;
மடல்நிறைந்த புகழுடையோய் நின்னயங்கள் மேன்மேலும்
வாழி வாழி ! (5)

ஸ்ரீ குமரகுருபரர்

தருமையாதீனத்து முனிபுங்கவரும், திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடத்தின் முதல்வருமான ஸ்ரீகுமரகுருபரசுவாமிகளின் திருப் பெயர் கொண்டு, சமயம், இலக்கியம், அறம் முதலியவற்றை எளியநடையில் தெளியச்செய்யும் ஆராய்ச்சிக்கட்டுரைகளுடன் திருப்பனந்தாள் ஸ்ரீகாசிமடம் ஸ்ரீமத் காசிவாசி சுவாமிகள் அவர் களது ஆணையின் வண்ணம் மாத இதழாக வெளிவருகிறது.

ஆயுட் சந்தா	(உள்நாடு)	ரூ.	100—00
,,	(வெளிநாடு)		125—00
ஆண்டுச்சந்தா	(உள்நாடு)		7—50
,,	(ஸ்ரீலங்கா)		10—00
,,	(வெளிநாடு)		12—00

நிர்வாக ஆசிரியர் : " ஸ்ரீ குமரகுருபரர் "

ஸ்ரீ காசி மடம் : திருப்பனந்தாள்.

தஞ்சை மாவட்டம். 612 504.

செய்திகள்

ஆயில்யத் திருநாள் வழிபாடு

தருமையாதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்தின் மாத ஜன்ம நட்சத்திரமாகிய ஆயில்யத் திருநாள் ஆலய வழிபாடு 21—5—80 அன்று திருத்திலதைப்பதி அருள்மிகு முத்தீஸ்வரர் ஆலயத்தில் மிகச்சிறப்பாக நடைபெற்றது. விசேஷ அபிஷேக ஆராதனைகளுடன் தலத் தேவாரப்பதிகம் பாராயணம் செய்யப்பட்டது. வித்துவான். திரு. வி. சா. குருசாமி தேசிகர், எம். ஏ. 'திருப்பதிகச் சிறப்பு' என்ற தலைப்பில் சொற்பொழிவாற்றினர். அன்பர்பலர் வந்திருந்து கண்டும் கேட்டும் பயன்பெற்றனர். தலத்திருப்பதிக வெளியீடு அன்பர்கட்கு வழங்கப்பட்டது.

தருமை ஆதீனத்தில்

ஸ்ரீ ஞானபுரீசுவரசுவாமி திருக்கோயில் பெருவிழா :

தருமையாதீன முதற்குரவர் ஸ்ரீலஸ்ரீ குருஞானசம்பந்த தேசிக பரமாசாரிய சுவாமிகள் ஜீவசமாதி எய்திய திருக்கோயிலாகிய ஸ்ரீ ஞானபுரீசுவரர் ஆலயத்தில் 26—5—80 திங்களன்று தொடங்கிப் பெருவிழா நடைபெற்றது. நாள்தோறும் இருவேளைகளிலும் பஞ்சமூர்த்திகள் திருவீதியுலாக் காட்சி நடைபெற்றது. திருவீதியுலாவின் போது ஆதீன வேதசிவாகமபாடசாலை, தேவாரபாடசாலை ஆசிரியர்களும் மாணவர்களும் ஆதீன தேவஸ்தான ஓதுவாமூர்த்திகளும் வேதபாராயணமும் திருமுறைப்பாராயணமும் நிகழ்த்திஞர்கள். அன்பர் பலர் தரிசித்து இன்புற்றனர்.

குருபூஜைப் பெருவிழா :

தருமையாதீனக் குருமுதல்வர் ஸ்ரீலஸ்ரீ குருஞானசம்பந்த தேசிக பரமாசாரிய சுவாமிகள் குருபூஜைப் பெருவிழா 4—6—80 புதன் கிழமை மிகச் சிறப்பாக நடைபெற்றது. ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் காலை ஆன்மார்த்தமூர்த்தி ஸ்ரீ சொக்கலிங்கப்பெருமானுக்கு விசேஷ அபிஷேக ஆராதனை செய்தருளிஞர்கள். திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடம் ஸ்ரீமத் காசிவாசி சுவாமிகள் வழிபாட்டில் கலந்து கொண்டு திருவருட்பிரசாதம் பெற்று மகிழ்ந்தார்கள்.

நண்பகல் ஸ்ரீ ஞானபுரீசுவரர் திருக்கோயிலில் அபிஷேகங்களும் பஞ்சமுகார்ச்சனையும், நவசக்தி அர்ச்சனை ஆகியவையும் சிறப்பாக நடைபெற்றன. ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் வழிபாட்டிற்கு வந்திருந்த அன்பர்கட்கு அருட்பிரசாதம் வழங்கியருளினார்கள். வழிபாடுமுடிந்ததும் மாகேஸ்வரபூஜை நடைபெற்றது

குருமூர்த்த தரிசனம் :

குருபூஜை விழாவன்று ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் மாலை 6 மணியளவில் நாதசுர இன்னிசை முழக்கத்துடன் திருமஞ்சனவீதியில் அமைந்திருக்கும் குருமூர்த்தங்களைத் தரிசித்து வழிபாடாற்ற எழுந்தருளினார்கள். ஒவ்வொரு குருமூர்த்தத்திலும் அருள் வரலாறு கூறப்பட்டது. வழிபாட்டிற்குப்பிறகு ஸ்ரீ ஞானபுரீசுவரர், ஸ்ரீ தருமபுரீசுவரர், ஸ்ரீ அஷ்டாதசபுஜ மகாலட்சுமி துர்க்கா தேவி திருக்கோயில்களில் வழிபாடாற்றித் திருமடத்திற்கு எழுந்தருளினார்கள். ஸ்ரீ சொக்கநாதப்பெருமானுக்கு, குருபூஜைத்திருநாளில் நிகழ்த்தப்பெறுகின்ற சிறப்பு வழிபாடுகள் திருமெய்ஞ்ஞான நிவேதனத்துடன் நிகழ்த்தப்பெற்றன. வழிபாட்டிற்குப்பின் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் திருக்கொலு வீற்றிருந்து அருட்காட்சி வழங்கினார்கள் ஸ்ரீமத் காசிவாசி சுவாமிகள் கொலு வழிபாடு நிகழ்த்தினார்கள் திருக்கூட்டத்து அடியவர்களும் அறிஞர் பெருமக்களும் தரிசித்து அருட்பிரசாதம் பெற்றுய்ந்தனர்.

பட்டினப்பிரவேசம் :

5—6—80 வியாழக்கிழமையன்று பட்டினப்பிரவேசத் திருநாள். காலை ஸ்ரீ சொக்கநாதப்பெருமானுக்கு விசேஷ அபிஷேக அலங்கார ஆராதனைகள் நிகழ்ந்தபின்னர் நண்பகல் மாகேசுவரபூஜை நடைபெற்றது இரவு தருமையாதீன இசைப்புலவர் சீகாழி எஸ். கோவிந்தராஜன் குழுவினரின் இன்னிசையரங்கு நிறைவுற்றது. பிறகு ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் சிவிகையில் எழுந்தருளித் திருவுலாக்காட்சி தந்தருளினார்கள். ஸ்ரீமத் காசிவாசி சுவாமிகளும் திருக்கூட்டத்து அடியார்களும், அறிஞர் பெருமக்களும், அன்பர்களும் உடன்வந்தனர். நாதசுர இன்னிசையும், திருமுறை இன்னிசையும் முழங்கின. திருவீதிகளில் பூரணகும்பங்கள் வைத்து ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்களை வழிபட்டு அருட்பிரசாதம் பெற்றனர் திருவுலாக்காட்சி நிறைவெய்தியதும் திருக்கொலுக்காட்சி நடைபெற்றது. அன்பர்கட்கு ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் ஆசியருளி அருட்பிரசாதம் வழங்கியருளினார்கள்.

திருநெறிய தெய்வத்தமிழ் மாநாடு :

தருமையாதீனக் குருமுதல்வர் ஸ்ரீ குருஞானசம்பந்தர் குருபூஜை விழாவை முன்னிட்டு 26-5-80 திங்கள் முதல் 5-6-80 வியாழன் முடிய திருநெறிய தெய்வத்தமிழ்மன்றத்தில் நாடோறும் மாலை 7மணி யளவில் மாநாடு நிகழ்வுற்றது.

மாநாட்டில் குன்றக்குடி ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்களும், திருப்பனந்தாள் ஸ்ரீகாசிமடம் ஸ்ரீமத். காசிவாசி சுவாமிகளும், உயர்நீதி மன்ற நீதிபதிகளும், மற்றும்பல அறிஞர் பெருமக்களும் சிறப்புரை யாற்றினர். 26-5-80 முதல் 30-5-80 முடிய காரைக்கால் புலவர் திரு. கோ. சாரங்கபாணியவர்கள் பெரியபுராண விரிவுரையாற்றினர். 31-5-80 முதல் 2-6-80 முடிய வேலூர் திரு. கே. குணபூஷணம் அவர்கள் கந்தபுராண விரிவுரை நிகழ்த்தினர்.

3—6—80 செவ்வாய் முதல் 5—6—80 வியாழன் முடிய திருமுறைப் பேரவை நிகழ்வுற்றது. தருமையாதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகா சந்நிதானம் அவர்கள் விழாவைத் தொடங்கிவைத்து ஆசியுரை வழங்கினர்கள். முத்தமிழ்க்காவலர் திரு. கி. ஆ. பெ. விசுவநாதம் அவர்கள் சிறப்புரையாற்றினர்கள். திருமுறைப் பேரவை நாட்களில் அறிஞர் பலர் கலந்துகொண்டு திருஞானசம்பந்தசுவாமிகள் தேவாரத் திருப்பதிகங்களைப்பற்றிப் பல்வேறு தலைப்புக்களில் ஆய்வுரைகள் வழங்கினர். தமிழகச் சமயமன்றச் சார்பாளர் பலர் கலந்துகொண் டனர்.

தமிழகச் சமய மன்றச் சார்பாளர்களின் சிந்தனைப் பரிமாற்ற நிகழ்ச்சிகள் வினாவிடை அரங்கம் ஆகியன இவ்விழாவில் குறிப்பிடத் தக்க நிகழ்ச்சிகளுள் அமையும். அறிஞர்களும் அன்பர்களும் கலந்து கொண்டு மாநாட்டைச் சிறப்புற நிகழ்த்தினர்.

சமயப் பயிற்சி வகுப்பு :

குருபூஜை விழாவை முன்னிட்டு 26—5—80 முதல் 5—6—80 முடிய சமயப் பயிற்சி வகுப்பு நடைபெற்றது. வகுப்பினைத் தருமை யாதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் ஆசியுரை வழங்கித் தொடங்கிவைத்தார்கள். டாக்டர். திரு. ச. அகத்தியலிங்கம் அவர்கள் தொடக்கவுரை நிகழ்த்தினர்கள். சிவஞானபோதம், திருவருட்பயன், திருக்களிற்றுப்படியார் ஆகிய சாத்திர நூல்களை முறையே திரு. சி. அருணைவடிவேல் முதலியார். திரு. ச. தண்டபாணி தேசிகர், திரு என். ஆர். முருகவேள் ஆகியோர் நடத்தினர். காலை 10 மணி முதல் 1 மணி வரை இப்பாடங்கள் கற்பிக்கப்பட்டன. பிற்பகல்

2-30 மணி முதல் 4-30 மணி வரை வேதங்கள், ஆகமங்கள், உபநிடதங்கள், புராணங்கள், பண்டாரசாத்திரங்கள், திருமுறைகள், சைவக்கிரியைகள், நீதிநூல்கள், சமய விழாக்கள் இவைபற்றி அறிஞர் பலர் பாடம் நடத்தினர். தமிழகத்தின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் வந்திருந்த நாற்பதின்மர் இப்பயிற்சியில் கலந்துகொண்டார்கள் காலை 6 மணி அளவில் சமயப் பயிற்சியாளர்கட்கு திரு. T. A. கிருஷ்ணன் அவர்கள் யோகாசனப் பயிற்சி அளித்தார். 5—6—80 அன்று மாலை 4 மணி அளவில் அண்ணாமலைப் பல்கலைக் கழகத் துணைவேந்தர் ஜஸ்டிஸ் திரு. B. S. சோமசுந்தரம் B. A., B. L., அவர்கள் சமயப் பயிற்சி மாணவர்கட்குச் சான்றிதழ் வழங்கினர்கள். சமயப் பயிற்சியாளர்கட்கு ஆதீனத்தின் சார்பில் உணவு முதலிய எல்லா வசதிகளும் செய்துகொடுக்கப்பட்டன.

திருஞானசம்பந்தர் திருக்கல்யாணத் திருவிழா

தருமையாதீனத்திற்குச் சொந்தமான ஆச்சாள்புரம் என வழங்கும் திருப்பெருமணநல்லூர் ஸ்ரீ சிவலோகத்தியாகராஜசுவாமி ஆலயத்தில் திருஞானசம்பந்தர் திருக்கல்யாண விழாவும் சிவஜோதி தரிசனமும், தேவஸ்தானத்தின் தேவார வகுப்பு ஆண்டுவிழாவும் 31—5—80 சனிக்கிழமை சிறப்பாக நடைபெற்றது. திருநெல்வேலி, புலவர். திரு. ம. சிவசம்பு பி. லிட்., "திருஞானசம்பந்தர் திருமணம்" என்ற தலைப்பில் சொற்பொழிவாற்றினர். தேவார வகுப்பு மாணவர்களுக்குப் பரிசு வழங்கப்பட்டது. அன்பர் பலர் விழாவில் கலந்து கொண்டு கண்டும் களித்தும் இறையருள் பெற்றனர்.

வேளூரில் வசந்தோற்சவம்

தருமையாதீனத்திற்குச் சொந்தமான வேளூர் ஸ்ரீ வைத்தியநாத சுவாமி திருக்கோயிலில் 20—5—80 செவ்வாய்க்கிழமை தொடங்கி 29—5—80 வியாழக்கிழமை வரை பத்துநாட்கள் வசந்தோற்சவ விழா சிறப்பாக நடைபெற்றது. பத்துநாட்களிலும் சுவாமி அம்பாள் புறப்பாடாகி வசந்தமண்டபத்தில் ஊஞ்சல் உற்சவம் கொண்டருளிய காட்சியை அன்பர் பலர் தரிசித்து அருள்பெற்றனர்,

எதிர்காலம்

ஜோதிஷம் திரு. A. இராசமாணிக்கம்

ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் நடுநிலைப்பள்ளி, திருப்பனந்தாள்.

ரௌத்திரிஹு ஆனிமீ 1உ முதல் 31உ முடிய.

(15—6—80 முதல் 15—7—80 முடிய)

ஸ்ரீ ரௌத்திரிஹு வைகாசிமீ 32உ ஸ்திரவாரம் புனர்பூசநக்ஷத்திரம் கௌலவகரணம் கூடிய காலத்தில் சூரிய உதயம் முதல் 32-நாழிகை 14-வினுடிக்கு தனுர் லக்கினத்தில் ஸ்ரீ லோகரட்சகரான சூரிய பகவான் ரிஷபராசியிலிருந்து மிதுனராசி சங்கிரமணமாக ஆனிமாதப் பிரவேசம் செய்தருளுகிறுர். அன்று ஷடசீதி புண்ணிய காலமாகும். மறுதினம் பானுவாரம் ஆனிமீ முதல்தேதியாகிறது. ஆனிமீ 7உ ஸ்திரவாரம் உதயாதி 33-நாழிகை 22 வினுடிக்கு ஸ்ரீசூரியபகவான் திருவாதிரைநக்ஷத்திரத்தில் பிரவேசித்து, கலியுகாப்தம் 5081 ரௌத்திரிவருஷத்தின் மேகாதிபதியை ஏற்படுத்துகிறுர். மேகாதிபதி சனிபகவான் ஆகிறுர். சங்கிரமகால கிரகஸ்திதியினுல் லோகமெங்கும் சுபிட்சம் நிலவும் லோகத்தில் உக்கிரம் நீங்கி இதமான நிலைமை ஏற்படும். நாடுகளில் ஏற்படுகின்ற ஆக்கிரமிப்பு ஊடுருவல் ஆகிய அதர்மவழி போக்குகள், ஆன்ருேர்களின் சமரச தர்மநீதி பேச்சுகளினின்றும் கட்டுப்பட்டு நிற்கும். தேசங்களில் அரசர்கள் ஜனுதிபதிகளினுல் தர்மபரிபாலனம் செவ்வையாக நடைபெற்றுப் பிரஜைகள் நலம்பல அடைவர்.

உலகிலுள்ள திருமடங்கள் ஆசாரிய பீடங்களில் சிவராஜயோகம் அடைந்து திருவீற்றுள்ள சிவஞான குருமகான்கள் தம் தெய்விகத் திருவாக்கினுல் லோகத்திற்குத் தர்மநீதி மார்க்கங்களையும் சிவாசார நல்வழிகளையும் எடுத்தியம்பி அவற்றைக் கடைப்பிடித்துவர ஊக்குவித்தருள்வார்கள். அன்னுர் வழியில் இவ்வுலகம் இயங்கும். எங்கும் சைவம் பரவும். தேசங்களிலெங்கும் தேவாலயங்களில் நித்தியம் ஆறுகால பூஜைகள், விசேஷ கால பூஜைகள் சிறப்பாக நடைபெறும். எங்கும் பிரஜைகள், சிவநேயச் செல்வர்களாகத் திகழ்ந்து மேன்மையான கிரியைகள் புரிந்து செல்வச் சிறப்புடன் வாழ்வார்கள்.

1. மேஷம் :- அசுவதி - பரணி – கார்த்திகை ¼
(சு. சே. சோ. லா. - லி. லு. லே. லோ. - அ.)

மேஷராசி 9 பாதங்களும் சுப பலன் தரும். குடும்பாபிவிருத்தியில் நல்ல பணவருமானங்கள் வந்துசேரும். வித்துவத்துவம் கலைத்துறைகளில் பிரபல நிலைமையை ஏற்படுத்தும். இயந்திர சாதனங்களில் வெளுமை வஸ்துவில் நற்பலன் ஏற்பட்டுக்கொண்டிருக்கும்' அரசாங்க நன்மையைத் தரும். முயற்சித்தவற்றில் வக்காலத்து நியாய பேச்சுகளில் நல்லன உருவாகும். புத்திசாதுரியத்தினுல் எல்லாக் காரியங்களும் மதிப்பாக நடந்துவரும். புத்திர பாக்கியம் ஒன்று ஏற்படும். தாம்பத்திய வாழ்வில் சுமுகம் நிலவும். ஆனிமீ 11உ 1 நாழிகை 1 விஞடி முதல் 13உ 23 நாழிகை 13 விஞடி வரையில் சந்திராஷ்டமம். திங்கள் செவ்வாய் சுபமாகும்.

2. ரிஷபம் :- கார்த்திகை ¾ - உரோகிணி – மிருகசீர்ஷம் ½
(இ. ஊ. ஏ. - ஒ. வ. வி. வு - வே. வோ.)

ரிஷபராசி 9 பாதங்களும் சுபமான பலனைத்தரும். குடும்பாபிவிருத்தியில் பண வருமானம் நல்லவிதமாக வந்துகொண்டிருக்கும். சகோதரர் பந்து அம்மான்கள் விசுவாச பான்மையில் இருந்துவருவர். இயந்திர சாதனத்தில் விருத்திபலன் காணும். அரசாங்கக் கடிதத் தொடர்பில் நல்லன ஏற்படும். தார புத்திரர்களின் சௌக்கியம் நன்ருக இருந்துவரும். ஆனிமீ 13உ 23 நாழிகை 13 விஞடிமுதல் 15உ 39 நாழிகை 13 விஞடிவரையில் சந்திராஷ்டமம். புதன் வியாழன் சுபமாகும்.

3. மிதுனம் :- மிருகசீர்ஷம் ½ - திருவாதிரை – புனர்பூசம் ¾
(கா. கி. - கு. க. ங. ச்சா. - கே. கோ. ஹ.)

மிதுனராசி 9 பாதங்களும் மிச்சிரபலனுக நடக்கும். குடும்பாபிவிருத்தியில் தனச்செலாவணிகள் சரளமாக இருந்துவரும். சகோதரர் உறவினர்களின் நலனில் அதிக ஈடுபாடும் காரிய சாதனையும் ஆகும் மாதப் பின்பகுதியில் உடல் நலம் பாதிக்கும். உத்தியோகத்தில் மறைமுக எதிர்ப்பு ஏற்படுதல் துணிச்சலாகச் செயல்பட்டுவருதல் ஆகும். தார புத்திரர்களின் சௌக்கியம் நன்ருக இருந்துவரும். ஆனிமீ 15உ 39 நாழிகை 13 விஞடி முதல் 17உ 49 நாழிகை 56 விஞடி வரையில் சந்திராஷ்டமம். வியாழன் வெள்ளி சுபமாகும்.

4. கடகம் :- புனர்பூசம் ¼ – பூசம் – ஆயில்யம்.
(ஹி. - ஹு. ஹே. ஹோ. ட. -. டி. டு. டே. டோ.)

கடகராசி 9 பாதங்களும் சுபபலன் தரும். குடும்பாபிவிருத்தியில் பண வருமானம் மதிப்பாக வந்துகொண்டிருக்கும். பிதா நலனில் அரசாங்கக் காரியங்களில் ஓரளவு கண்யச்செலவும் ஆகும்.

பூமியில் இயந்திரசாதனங்களில் மாதப் பின்பகுதியில் விசேஷ பலனை ஏற்படுத்தித் தரும். மனோதைரியத்தினால் எல்லாக் காரியங்களையும் செயல்படுத்துதல் ஆகும். 18உக்குமேல் புதியவாகன பிராப்தியைத் தரும். தாரபுத்திரர்களின்சௌக்கியம் நன்றாக இருந்துவரும். ஆனிமீ 17உ 49 நாழிகை 56 வினாடிமுதல் 19உ 57 நாழிகை 14 வினாடி வரையில் சந்திராஷ்டமம். சனி ஞாயிறு சுபமாகும்.

5. சிம்மம் :- மகம் - பூரம் – உத்திரம் ¼

(ம. மி. மு. மே. - மோ. ட. டி. டு. - டே.)

சிம்மராசி 9 பாதங்களும் சுபபலன் தரும். குடும்பாபிவிருத்தியில் சமயோசித வருமானம் வருதல் பணவசதி இவற்றில் திருப்திகரமாக இருந்துவரும். வித்தியா வியாபாரம் சித்திரக்கலைகளில் நாளுக்குநாள் அபிவிருத்திகாணும். மாதப் பின்பகுதியில் பிறரிடம் உரையாடுதலில் நிதானம் வேண்டும். ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமிக்கு அருச்சனை செய்தல் நலம். தாரபுத்திரர்களின் சௌக்கியம் நன்றாக இருந்துவரும். ஆனிமீ 19உ 57 நாழிகை 14 வினாடி முதல் 22உ 3 நாழிகை 7 வினாடி வரையில் சந்திராஷ்டமம். திங்கள் செவ்வாய் சுபமாகும்.

6. கன்னி :- உத்திரம் ¾ - ஹஸ்தம் - சித்திரை ½

(டோ. ப. பி. - பு. ஷ. ண. ட. - பே. போ.)

கன்னியாராசி 9 பாதங்களும் சுபபலன்தரும். குடும்பாபிவிருத்தியில் பணவருமானத்தில் ஒப்பந்த லேவாதேவிகளில் கண்யநிலைமையை ஏற்படுத்திக்கொண்டிருக்கும். 18 உக்குமேல் பசு வீடு இவற்றின் பிராப்தியில் நல்லன ஏற்படும். ஓர் சிறந்த பொருள் கைக்கு வந்துசேரும். தாரபுத்திரர்களின் சௌக்கியம் நன்றாக இருந்துவரும். ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமிக்கு அருச்சனைசெய்யச் சிரசில் இடிபடுதல் போன்றவை நீங்கும். ஆனிமீ 22உ 3 நாழிகை 7 வினாடி முதல் 24உ 9 நாழிகை 54 வினாடி வரையில் சந்திராஷ்டமம். புதன் வியாழன் சுபமாகும்.

7. துலாம் :- சித்திரை ½ – சுவாதி – விசாகம் ¾

(ர. ரி. - ரு. ரே. ரோ. தா. - தி. து. தே.)

துலாராசி 9 பாதங்களும் மிச்சிரபலனாக நடக்கும். குடும்பாபிவிருத்தியில் பணவருமானங்கள் வந்துகொண்டிருக்கும். சகோதரர் செய்கையில் மனவருத்தமாயினும் ஒருவிதத்தில் ஒற்றுமைகாணும். காதுவலி கன்னவீக்கம் போன்ற நலிவும் சிகிச்சையும் ஆகும். 18உக்குமேல் வாகனம் வீடு இவற்றில் நல்ல சௌகரியம் தரும்

தாரபுத்திரர்களின் சௌக்கியம் நன்ருக இருந்துவரும். ஆனிமீ 24உ 9 நாழிகை 54 விஞடி முதல் 26உ 19 நாழிகை 57 விஞடி வரையில் சந்திராஷ்டமம். ஞாயிறு திங்கள் சுபமாகும்.

8. விருச்சிகம் :- விசாகம் ¼ - அனுஷம் – கேட்டை.
(தோ. - ந. நி. நு. நே. - நோ. ய. யி. யு.)

விருச்சிகராசி 9 பாதங்களும் மிச்சிரபலனுக நடக்கும் குடும்பாபி விருத்தியில் தனுதி சௌகரியங்கள் நல்ல விதமாக இருந்துவரும். சகோதரர் நலம் சாதாரணமாக இருந்துவரும். வீடு வாகனத்தில் மாறுதல் சம்பவிக்கும். வித்தியாவியாபாராதி கலைத்துறைகளில் வெளி வட்டாரத்தில் புகழ் ஏற்படுவதாகும். பிதாவிற்கு உடல்நலம் பாதிக்கினும் உடன் குணமாகும். தாரபுத்திரர்களின் சௌக்கியம் நன்ருக இருந்துவரும். ஆனிமீ 26உ 19 நாழிகை 57 விஞடி முதல் 28உ 34 நாழிகை 56 விஞடி வரையில் சந்திராஷ்டமம். செவ்வாய் புதன் சுபமாகும்.

9. தனுசு :- மூலம் – பூராடம் – உத்திராடம் ¼
(யே. யோ. பா. பி. - பு. த. ப. ட. - பே.)

தனுர்ராசி 9 பாதங்களும் மிச்சிரபலனுக நடக்கும். குடும்பாபி விருத்தியில் பணம் வரவும் செலவும் சரிசமனுக இருந்துவரும். சகோதரர் நலம் சாதாரணமாக இருந்துவரும். வித்துவத்துவம் கலைத்துறைகளில் அரசாங்க கௌரவம் தரும். பூமி இயந்திரங்களில் 15உ முதல் விருத்திகாணும். புத்திரர் புத்திரிகளின் சௌக்கியம் நன்ருக இருந்து வரும். மனைவிக்குச் சிரோபாதைபோன்ற நலிவு ஏற்படினும் உடன் குணமாகும். ஜீவனோபாயம் பெருமதிப்பாக விளங்கும். ஆனிமீ 28உ 34 நாழிகை 56 விஞடி முதல் 30உ 55 நாழிகை 54 விஞடி வரையில் சந்திராஷ்டமம் புதன் வியாழன் சுபமாகும்.

10. மகரம் :- உத்திராடம் ¾ – திருவோணம் – அவிட்டம் ½
(போ. ஜ. ஜி. - கி. கு. கே. கோ. - கா. கி.)

மகரராசி 9 பாதங்களும் சுபமான பலனைத்தரும். குடும்பாபி விருத்தியில் பணவருமானம் முயற்சித்தவகையில் வரவாகிக்கொண்டிருக்கும். சகோதரர் மேன்மைஸ்திதியில் விளங்குவர். வித்தியா வியாபாராதிகளில் அரசாங்க நன்மைகளை உண்டுபண்ணும். வீடு வாகனபிராப்தியில் 18உக்குமேல் ஓர் நல்லசௌகரியம் உண்டாகும். புத்திரிக்குச் சுபம் தரும். பெண் மகவு ஒன்றும் ஏற்படும். தாம்பத்திய வாழ்வில் சுமுகம் நிலவும். ஆனிமீ 4, 5, 31 தேதிகள் சந்திராஷ்டமம். ஞாயிறு திங்கள் சுபமாகும்.

11. கும்பம் :- அவிட்டம் ½ - சதயம் - பூரட்டாதி ¾

(கு, கே. - கோ. ஸ. ஸி. ஸு. - ஸே. ஸோ. தா.)

கும்பராசி 9 பாதங்களும் மிச்சிரபலனாக நடக்கும். குடும்பாபி விருத்தியில் பண வருமானங்களில் நல்ல நிலைமையாக இருந்துவரும். சகோதரருக்குச் சௌகரியங்கள்பல ஏற்படும். இராசிக்கு இரத்தாதிக்க மாக நலிவு ஏற்பட்டு உடன் குணமாகும். ஞாயிற்றுக்கிழமைகளில் சூரியார்ச்சனை செய்ய நலம் தரும். தாரபுத்திரர்களின் நலம் நன்றாக இருந்துவரும். ஆனிமீ 6உ 4 நாழிகை 27 வினாடி முதல் 8உ 33 நாழிகை 42 விநாடி வரையில் சந்திராஷ்டமம். செவ்வாய் புதன் சுபமாகும்.

12. மீனம் :- பூரட்டாதி ¼- உத்திரட்டாதி - ரேவதி.

(தி. - து. ஸ. ச. த. - தே. தோ. ச. சி.)

மீனராசி 9 பாதங்களும் சுபபலன் தரும். குடும்பாபிவிருத்தியில் தனுதிசௌகரியங்கள் நல்லவிதமாக இருந்துவரும். சகோதரர் பந்து அம்மான்களின் அபிலாஷையும் ஒற்றுமைப்பான்மையும் திருப்தி யளிப்பதாகும். பூமியில் இயந்திரங்களில் விருத்திபலன் தரும். வித்து வத்துவம் கலைத்துறைகளில் நன்மதிப்பு தரும். வீடுவாகனங்களில் நவீனம் ஏற்படும். புத்திரர்களின் வாழ்க்கைமுன்னேற்றம் சந்துஷ்டி யளிப்பதாகும். தாம்பத்தியவாழ்வில் சுமுகம் நிலவும். ஆனிமீ 8உ 33 நாழிகை 42 விஞடி முதல் 11உ 1 நாழிகை 1 விஞடி வரையில் சந்திராஷ்டமம். புதன் வியாழன் சுபமாகும்.

EXTRACT FROM THE VISITORS' BOOK

Dharmapuram Adhinam

Sri Swayambunathaswamy Devasthanam, Peralam.

By Lord Siva's blessings we have this day visited this famous temple. The temple is maintained neat and clean and the staff members and temple superintendent are very kind to the visitors.

(S-d) Dr. G. Swaminathan M, B. B. S.
Asst Surgeon

(S-d) Dr. (M) K. P. Tamilarasi
M. B. B. S., DMCH
Thanjavur Municipality.

17—5—80

உ

சிவமயம்

ஆனிமாதச் சிறப்பு நாட்கள்

16—6—80 திங்கள் தருமையாதீனம் 19 ஆவது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ மாணிக்கவாசக தேசிக பரமாசாரிய சுவாமிகள், 23 ஆவது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணிய தேசிக பரமாசாரிய சுவாமிகள் குருபூஜை.

17—6—80 செவ்வாய் ஆயில்ய விழா.

19—6—80 வியாழன் அமர்நீதி நாயனார் குருபூஜை. தருமையாதீனம் 3 ஆவது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சச்சிதானந்த தேசிக பரமாசாரிய சுவாமிகள் குருபூஜை.

20—6—80 வெள்ளி ஆனித்திருமஞ்சனம். ஸ்ரீ நடராஜர் அபிஷேகம் மாயூரம் - வள்ளலார்கோயில் ஸ்ரீ வதான்யேசுவரசுவாமி சம்வத்ஸராபிஷேகம்.

24—6—80 செவ்வாய் திருப்பனந்தாள் ஸ்ரீ அருணஜடேசுவரசுவாமி சம்வத்ஸராபிஷேகம்.

28—6—80 சனி பௌர்ணமிபூஜை. விரதம் மாதபூஜையில் முப்பழம் சாத்துதல் காரைக்கால் மாங்கனி உற்சவம்.

1—7—80 செவ்வாய் வைத்தீசுவரன்கோயில் ஸ்ரீ வைத்தியநாதசுவாமி சம்வத்ஸராபிஷேகம்.

2—7—80 புதன் திருப்பறியலூர் ஸ்ரீ வீரட்டேசுவரசுவாமிக்கும், திருக்குவளை ஸ்ரீ பிரமபுரீசுவரசுவாமிக்கும் சம்வத்ஸராபிஷேகம். சங்கடஹர சதுர்த்தி.

4—7—80 வெள்ளி மாயூரம் - காசிவிசுவநாதசுவாமிகோயில் ஸ்ரீ விசுவநாத சுவாமி சம்வத்ஸராபிஷேகம்.

5—7—80 சனி காளாஷ்டமி ஏயர்கோன் கலிக்காமநாயனார் குருபூஜை.

8—7—80 செவ்வாய் வேளூர்க் கிருத்திகை. தருமபுரம் ஸ்ரீ சண்முகர் கிருத்திகை அபிஷேகம். கிருத்திகை விரதம்.

9—7—80 புதன் பிரதோஷம்.

10—7—80 வியாழன் மாதசிவராத்திரி

11—7—80 வெள்ளி சர்வ அமாவாசை.

14—7—80 திங்கள் ஆயில்ய விழா.

15—7—80 செவ்வாய் திருக்கடவூர் ஸ்ரீ முனீசுவரபூஜை. ஸ்ரீ மாணிக்கவாசகர் குருபூஜை.

குருபாதம்

"ஞானசம்பந்தம்"

தருமையாதீனத் திங்கள் இதழ்

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனத்திலிருந்து வெளிவருவது. சமய உண்மைப் பொருள் முதலிய வற்றைக் குறித்த தெளிவான கட்டுரைகள் அடங்கியது. சைவ சமயத்தின் உண்மைகளை உணர்வதற்குப் பெருந் துணையானது. கையொப்பத் தொகையைக் கீழ்க்கண்ட முகவரிக்கு அனுப்பி ஞானசம்பந்தம் பெற்றுப் பயனுறவும்.

ஆண்டுச் சந்தா	(உள்நாடு)	... ரூ.	9—00
ஆண்டுச் சந்தா	(சிலோன்)	... ரூ.	11—00
ஆண்டுச் சந்தா	(வெளிநாடு)	... ரூ.	17—00
ஆயுள் சந்தா	(உள்நாடு)	... ரூ.	100—00
ஆயுள் சந்தா	(வெளிநாடு)	... ரூ.	125—00

கட்டணம் அனுப்பவேண்டிய முகவரி :—

செயலாளர்,
ஞானசம்பந்தம் செயலகம்,
தருமபுரம், மாயூரம் - 609001
தஞ்சை மாவட்டம்.

குறிப்பு :— ஞானசம்பந்தம் தவிர பிற தருமையாதீன வெளியீடுகளைப் பெற விரும்புவோர், மேலாளர், ஞான சம்பந்தம் பதிப்பகம் - தருமபுரம். மாயூரம் – 609001, என்ற முகவரிக்கே தொகை அனுப்பிப் பெறவேண்டும்.

Printed & Published by V. Ramaiah Pillai Manager Dharmapuram at the Gnanasambandam Press. Dharmapuram Mayuram 10—6—80